Registered as a News Papei  பக்கங்கள் 10  விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04  திருவள்ளுவர் ஆண்டு 2024  மாசி 15  [26 - 02 - 1993]  வெள்ளிக்கிழமை  ஓசை 08

## அவசரகால தேவைக்கு உணவுக் கையிருப்பு

யாழ். குடாநாட்டின் அவசரகால உணவுத் தேவைகளை முன்னிட்டு சுமார் ஐயாயிரம் மெற்றிக் தொன் எடையுடைய "தாங்கு நிலைக் கையிருப்பு" (buffer stock) ஒன்றை குடாநாட்டில் வைத்துப் பேணுவதற்கு யாழ். செயலகம் நடவடிக்கை எடுத்து வருகிறது கொழும்புத் துறைமுகத்தில் தரித்துநிற்கும், சுமார் 5000 மெற்றிக் தொன் உணவுப் பொருள்களை ஏற்றக் கூடிய "வாதுவ" என்ற கப்பலில் பல அத்தியாவசிய உணவுப்பொருள்கள் (10-ம் பக்கம் பார்)

# நானாட்டானில் துணிகர தாக்குதல்; பல படையினர் பலி; பலர் படுகாயம்

## ஏழு காவலரண்கள் தகர்ப்பு

[யாழ்ப்பாணம்]

மன்னார் மாவட்டம் நானாட்டானில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட துணிகரத் தாக்குதல் ஒன்றின் போது இராணுவத்தினரின் ஏழு காவலரண்களும், அவர்கள் தங்கியிருந்த வீடு ஒன்றும் முற்றாக அழிக்கப்பட்டது. இத்தாக்குதலில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

இத் தாக்குதலில் பதினொரு விடுதலைப் புலிகள் வீரச்சாவடைந்தனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு 12.00 மணியளவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இத் தாக்குதல் சுமார் 10 நிமிடங்கள் வரை நீடித்தது நானாட்டானில் இராணுவ முகாமிற்கும் கட்டைக்காட்டிற்கும் இடையில் அமைந்திருந்த ஏழு காவலரண்களும், ஒரு வீடுமே தாக்குதலுக்கு உள்ளானது. இத் தாக்குதலின் முடிவில் இவ் ஏழு காவலரண்களும், வீடும் புலிகளிடம் முழுமையாக வீழ்ச்சி கண்டது

இத் தாக்குதலின் போது இராணுவத் தரப்பில் ஐந்து பேர் கொல்லப்பட்டதாகவும் ஒன்பது பேர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் இருப்பதாகவும் சிறிலங்காபாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன ஆனால் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதம் இதைவிட அதிகமானதென களத்திலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## 11 வேங்கைகள் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

நானாட்டானில் நேற்றுமுன்தினமிரவு விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் போது 11 புலிகள் வீரச்சாவடைந்தனர்.

★ மேஜர் அச்சுதன் அந்தோனிமுத்து ஜோன்சன், முருங்கன்பிட்டி, முருங்கன்

★ லெப்டினன்ட் ராஜசேகர் கந்தையா தேவராசா, கிரான், மட்டக்களப்பு

★ லெப்டினன்ட் மோகன் [பசில்], திருச்செல்வம் லூக்காஸ், 8 ஆம் வட்டாரம், பேசாலை

★ 2 ஆம் லெப்டினன்ட் இசையரசன், யோகேஸ்வரன் மனோஜ்குமார், முழங்காவில், பூநகரி

★ வீரவேங்கை பரசுராமன் தர்மரட்ணம் தயானந்தன், வாடியடி, பூநகரி, மன்னார்

★ கப்டன் பிரவின்ராஜ் கேடி ஜயசேன ஆரியவென்ச, மடு றோட், மடு, மன்னார்

★ லெப்டினன்ட் செங்கோலன் குரூசை எட்வேட், குமாணயங்குளம், அடம்பன், மன்னார்

★ லெப்டினன்ட் கடவுள் — மகாலிங்கம், நெல்லியடி, கரணவாய்

★ 2 ஆம் லெப்டினன்ட் திருமேனி, செல்லையா ஆனந்தீஸ்வரன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

★ வீரவேங்கை காந்தன் நீலகண்டன் விஜயகுமார், உயிலங்குளம், மன்னார்

★ வீரவேங்கை கார்த்திகேயன், செபஸ்ரியான் நெல்சன், பழுவராயன், கட்டை அடம்பன், மன்னார்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## கைப்பற்றிய ஆயுதங்கள்

(யாழ்ப்பாணம்)

நானாட்டானில் நேற்று முன்தினம் நள்ளிரவு விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| ஆர். பி ஜி | — 01 |
| ஆர். பி ஜி செல்கள் | — 07 |
| ஆர் பி ஜி. புரப்புளர் | — 07 |
| 60 எம் எம் மோட்டார் | — 02 |
| 60 எம். எம். செல்கள் | — 15 |
| ஏகே. எல். எம். ஜி. | — 01 |
| ஏகே. எல்.எம்.ஜி ரம் மகசின் | — 07 |
| ஏகே. எல். எம் ஜி லிங்குகள் | — 835 |
| ரி 56-02 | — 05 |
| ரி 56 மகசின் | — 25 |
| ரி81 மகசின் | — 01 |
| நடுத்தர ரவைகள் | —3028 |

[10 ஆம் பக்கம் பார்க்க]

கிளாலி கடற்பரப்பில்

## ஞாயிறு நடந்த தாக்குதலில் நால்வர் பலியாகினர்?

(பருத்தித்துறை)

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு ஆலங்கேணியிலிருந்து கிளாலி நோக்கி பொருள்களுடன் வந்த படகு மீது சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போது படகோட்டி உட்பட நால்வர் பலியானதாகத் தெரிவிக்கப்பட்டது.

படகைச் செலுத்திவந்த படகின் உரிமையாளரான [10 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ். குடாக்கடலில் மீனவர்மீது தாக்குதல்

குடாக்கடலில் கடற்படையினரின் நடமாட்டம் மீண்டும் அதிகரித்துள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர் நேற்றைய தினம் பண்டை தீவுக்கும் கல்முனைக்கும் இடைப்பட்ட கடற்பிரதேசத்தில் பிளாஸ்ரிக் படகுகளிலும், சாதாரண வள்ளங்களின் உதவியுடனும் மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர்கள்மீது மண்டைதீவுப் பக்கமாக இருந்துவந்த கடற்படையினர் ரோந்துப்படகுகள்மூலம் கடற்படையினர் சுட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

[10 ஆம் பக்கம் பார்க்க]

## மதுகம தோட்ட பகுதியில் பல தமிழர் கைது

மதுகம பகுதியை சுற்றிவளைத்து தேடுதல் நடத்திய பாதுகாப்பு படையினர் சந்தேகத்தின் பெயரில் பல தமிழர்களை கைது செய்துள்ளனர்.

இவர்கள் "நெபடுவன்கல" தோட்டத்தில் வைத்தே கைது செய்யப்பட்டனர். இதில் 10 வடபகுதி தமிழரும் அடங்குவர் என்றும் தெரிய வருகின்றது.

## மகிழவெட்டுவான் சம்பவம் 23 படை மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் மகிழவெட்டுவான் கிராமத்தில் நடைபெற்ற படுகொலைச் சம்பவத்திற்கு சிறிலங்கா படையினரே காரணம் என்று சிறிலங்கா அரசு கூறியுள்ளது

அராலித்துறையில் லெப்டினன்ட் ஜெனரல் கொப்பேகடுவ உட்பட 10 இராணுவத்தினர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இக்கிராமத்தில் இராணுவத்தினர் படுகொலையை நடாத்தியிருந்தனர்.

மேற்படி கிராமத்தில் சுமார் முப்பது தமிழ் மக்களை படுகொலை செய்தனர் என்று [10 ஆம் பக்கம் பார்க்க]

## கிளாலி - பூநகரி படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ் மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் யோ தமிழ்க் குமரன் அறிவித்துள்ளார்.

## மீட்புநிதி சேகரிப்பு

உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக மேற்கொள்ளப்பட்டுவரும் மீட்புநிதி சேகரிப்பு நாளை கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் முற்பகல் 9-00 மணி தொடக்கம் 11-30 மணி வரை நெல்லியடி மகாவித்தியாலயத்திலும்பருத்தித்துறை. வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பிற்பகல் 1 00 மணி தொடக்கம் 3-00 மணி வரை பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியிலும் இடம்பெற உள்ளதாக தமிழீழமீட்புநிதிப் பொறுப்பாளர் சொ. வெற்றியரசன் அறிவித்துள்ளார்.

# பாரதீய ஜனதா ஊர்வலம் மீது டில்லியில் பொலிஸ் பாய்ச்சல்

### 500 பேர் காயம்; 6000 பேர் கைது

[டில்லி]

புதுடில்லியில் நேற்று ஊர்வலம் நடத்த முயன்ற பாரதீய ஜனதா கட்சித் தொண்டர்கள் மீது பொலிசார் நடாத்திய தாக்குதலில் சுமார் 500 பேர் காயமடைந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. 6000 பேர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டனர்.

ஊர்வலத்தினை தடுத்து நிறுத்துவதற்காக வீதிகள் தோறும் முட்கம்பி வேலிகள் இடப்பட்டு பலத்த பாதுகாப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதனால் டில்லியில் இயல்புநிலை பாதிக்கப்பட்டிருந்தது.

ஊர்வலத்தில் கலந்துகொள்ள வந்த பாரதிய ஜனதாக் கட்சித் தொண்டர்கள்மீது பொலிசார் கண்ணீர்ப்புகை பிரயோகம், குண்டாந்தடிப் பிரயோகம் என்பவற்றை மேற்கொண்டதுடன் இவர்கள்மீது தண்ணீர் குழாய்கள் மூலம் நீரை வேகமாகப் பாய்ச்சினர். இந் நடவடிக்கைகளால் 500க்கு மேற்பட்டோர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் ஊர்வலத்தில் கலந்து கொள்ள வந்த 6000 பேர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டனர்.

## வரி விளம்பரம்

**பாடல் பதிவு**

நீங்கள் விரும்பும் பாடல்களை இப்போது கொம்பக்ட் டிஸ்க் மூலம் பதிவு செய்து பெற்றிட இன்றே வாருங்கள் ஷண்றெக்கோடிங் ஸ்பொட் பஸ்நிலைய வயிரவர் கோவில் அருகாமையில் நவீன சந்தை உடபுறம் யாழ்ப்பாணம்.
(4068)

**திருக்கணித பஞ்சாங்கம்**

ஸ்ரீமுக புதுவருட(1993-1994) திருக்கணித பஞ்சாங்கம் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. விலை ரூபா 65.00 வியாபாரிகளுக்குத் தகுந்த கமிஷன் உண்டு. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
(3381)

**மீட்டல் வகுப்புகள்**

**H.N.D.A.** (நான்காம் வருடம்) (தொழில் நுட்பக்கல்லூரி பிறவுண் வீதி) (பழைய பாடத்திட்டம்) மீட்டல் வகுப்புக்கள் ஆரம்பம்: தொடர்பு. இலக்கம் 140, பலாலி வீதி, திருநெல்வேலி. (4340)

**தையலகம்**

மங்கலகரமான வைபவங்களுக்கு - பெண்களுக்கான சாறி பிளவுஸ்கள், அலங்கார ஆடைகள், பாடசாலை மாணவருக்கான சீருடைகள், நவீன முறையில் குறித்த தவணையில் வேலை செய்து கொள்ள திலகா மகளிர் தையலகம், 163, நாவலர் வீதி, (மனோகரா தியேட்டர் சந்தி) யாழ்ப்பாணம். (சி/5964)

**மூக்குக் கண்ணாடி காணவில்லை**

அ. சின்னத்துரை (யாழ். சிறுப்பிட்டி அ. த. க. பாடசாலை அதிபர், நீர்வேலி) கூடுடன் மூக்குக்கண்ணாடி கருதனாமடம் - சுன்னாகம் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் றொட்டியாலடி மண்ணெண்ணெய் கடையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.
(4343)

**சோதிடம்**

திருக்கணிதப்படி 5-3-93 இலும் வாக்கியப்படி 4-2-94 இலும் சனீஸ்வரன் மாற்றத்தினால் உங்களுக்கு ஏற்படப் போகும் பலாபலன்களையறிய வேலணை சோதிடர் V A. சிவராசா, 152B அரசடி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(4346)

**பொதுக்கூட்டம்**

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் சங்கத்தலைவர் திரு. சு. சிற்றம்பலம் தலைமையில் நாளை சனிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு இல. 291, ஸ்ரான்லி வீதியில் உள்ள யாழ். ப. நோ. கூ. சங்கத்தலைமை அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

1993 ஆண்டிற்குரிய உத்தேச வரவு செலவுத்திட்டம் இக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது. இக்கூட்டத்தில் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. விங்கநாதன் உரை நிகழ்த்த உள்ளார்.

**தெருக்கூத்து**

கடந்த செவ்வாய் இரவு யாழ் நகரின் பல பகுதிகளிலும் கலை பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் சீதனக்கொடுமை, சாதிக்கொடுமை, பெண்விடுதலையையமையமாகக்கொண்ட தெருக்கூத்து நடாத்தப்பட்டது இத் தெருக்கூத்தினை பெருந்திரளான மக்கள் பார்வையிட்டனர்.

# ஜப்பானிய கலைஞரின் கைக்கடிகாரம் திருட்டு

ஜப்பானிய கலைஞரின் இரத்தினக் கற்கள் பதித்த 9 லட்சம் ரூபா பெறுமதியான கைக்கடிகாரம் கொழும்பில் திருடப்பட்டுள்ளதாக பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கைக் கலைஞர்களுக்கு உதவ இசை நிகழ்ச்சிகளைக் கொழும்பில் நடத்திவரும் ஜப்பானின் பிரபல இசை மேதையும் உலகப் பிரசித்தி பெற்ற இசைக்கலைஞருமான யஷீஹிட்டோ தாக்கிமோட்டோ என்பவரின் இரத்தின கைக்கடிகாரமே திருடப்பட்டுள்ளது.

இவர் அண்மையில் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இசை நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டபோதே இவரது கைக்கடிகாரம் திருடப்பட்டது என கறுவாத்தோட்டம் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

## தேசிய கல்லூரிக்கு எமது வாழ்த்துக்கள்

யாழ். சாவகச்சேரி இந்துக்கல்லூரி தேசிய கல்லூரியாக தரம் உயர்த்தப்பட்டதையிட்டு எமது உள்ளம் கனிந்த வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம். இதே வேளை இக்கல்லூரி மேலும் பல நற்பணி புரியும் மாணவர்களை உருவாக்கும் என வாழ்த்துகின்றோம்.

மைக்கல் கவுஸ்
பூப்பிற்றி பஜார்
யாழ்ப்பாணம்.

(சி/ 6089)

## வாழ்த்துகின்றோம்

"சகலகலா வித்தகர்," நாதஸ்வர இசைமேதை திரு. வி. கே பஞ்சமூர்த்தியின் புல்லாங்குழல் இசை அரங்கேற்றம் இனிது நிறைவேற வாழ்த்தும்,

- (கரன்) குண்டுமணி குடும்பம்

(சி- 6091)

யா / சன்மார்க்க மகாவித்தியாலயம்

## பாராட்டுவிழாவும் வருடாந்த பரிசளிப்பு விழாவும்

யா / சன்மார்க்க மகாவித்தியாலயத்தில் 16 ஆண்டுகள் ஆசிரியராகவும், உப அதிபராகவும், அதிபராகவும் கடமையாற்றி தற்போது யாழ் கோட்டத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராக இருக்கும் சி. நடேசபிள்ளை அவர்களுக்கு 26-02-93 இன்று பாராட்டுவிழா காலை 8.30 மணிக்கு நடைபெறும். இதனைத் தொடர்ந்து வருடாந்த பரிசளிப்பு விழாவும் நடைபெறும்.

விளம்பர அன்பளிப்பு:

**சுப்பஸோ வீடியோ ஓடியோ சென்ரர்**

198/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

(சி-6093)

## நாடக விழா

குழந்தை ம. சண்முகலிங்கத்தின்

★ ஒற்றுமையின் சின்னம்
சிறுவர் நாடகம்

★ புழுவாய் மரமாகி
பாடசாலை நாடகம்

★ உறவுகள்
சமூக நாடகம்

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
இன்று மூன்று மணிக்கு
அன்பளிப்பு : ரூபா 10/- 2½/-
யாழ். மாவட்ட திரிசாரணர் குழு

சாரணியம் சிறப்புற வாழ்த்துகிறோம்

**ரஜா கிறீம் கவுஸ்**

36, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம் (4345)

யாழ் சனசமூக நிலையங்கள்

# சமாசங்கள் நடத்திய போட்டிகளின் முடிவுகள்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் இருக்கும் சனசமூக நிலையங்களின் சமாசத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட கவிதை, சிறுகதை, ஓவியம், கட்டுரை, பொது அறிவு ஆகிய போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியோரின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளது.

கவிதை: (1) யோ. யோ. அல்பொன்சஸ், (2) அ. மைக்கல் கொலின், (3) விக்ரர் கொலஸ்ரிக்கா.

சிறுகதை: (1) ச. மைக்கல் கொலன்ஸ், (2) வி. எம். ஜெராட், (3) கிருஷ்ணானந்தன.

ஓவியம்: (1) வின்சன் அனற் றஜனி. (2) சுகி, (3) அ. கரோலின்.

கட்டுரை: (1) தி. வாசுகி, (2) ஞா. யூட்குறேசியன், (3) கிருஸ்ணானந்தன்.

பொது அறிவு: (1) கு. ம. டினேஸ், (2) ச. குகநேசன், (3) இ. உமாபதி.

யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவு சபையின் மாவட்ட மட்ட மகளிர்குழு சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மாணவர்களுக்கிடையே நடத்திய போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது

கீழ்ப்பிரிவு: (1) தெமியன் பரி. யோவான் கல்லூரி. யாழ்ப்பாணம் (2) யோகேஸ்வரன் திவாகர், யா. மானிப்பாய் மெமோறியல் பாடசாலை. (3) ம. பிரவீணன், மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.

மத்திய பிரிவு: (1) எஸ். கோகுலன், பரி. யோவான் கல்லூரி (2) தி. தயாளினி. யா. இந்து மகளிர் கல்லூரி, (3) ஆர். சஜீவன், பரி. யோவான் கல்லூரி.

மேற்பிரிவு: (1) இ. விநோதினி மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை. (2) வீரசிங்கம் ரவீந்திரன், யா. மானிப்பாய் மெமோறியல் பாடசாலை. (3) மி. உமாசங்கர் பரி. யோவான் கல்லூரி.

**DIPLOMA / POSTGRADUATE DIPLOMA IN ENGLISH LANGUAGE TEACHING 1991 / 92**

Letters have been posted to the selected candidates to register for the above course before 1993 03-01 and to meet the Head / English Language Teaching Centre on 1993-03 01 at 9.00 a. m at his office.

The list of selected candidates is displayed in the University Notice Board.

REGISTRAR
UNIVERSITY
OF JAFFNA
JAFFNA.
1993-02-25

(சி/6094)

## நினைவு கூருகின்றோம்... 1993-02-26

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் கிளிநொச்சி-பரந்தன் சந்தியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

மாலா

1987ஆம் ஆண்டு யாழ் - சாவகச்சேரிப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த

லொயிட் (மணியம் விமலசேகர் - சாஸ்திரிகூழாங்குளம் - வவுனியா)

1989ஆம் ஆண்டு முல்லைத்தீவு - கோடாலிக்கல் பகுதியில் இந்தியப்படையினரின் பொறிவெடியில் சிக்கியதில் வீரச்சாவெய்திய-

ஜஸ்ரின் (ஆறுமுகம் புவேந்திரன் - முள்ளியவளை - முல்லைத்தீவு)

கிளிநொச்சி - ஆனையிறவு, கண்டிக்குளம் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய-

லெப். சரத் (வேஞ்சியூஸ் பீற்றர் கெனடி - தாளையடி. வடமராட்சி கிழக்கு - யாழ்.)

முல்லைத்தீவு - வற்றாப்பளைப்பகுதியிற் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்ட முள்ளியவளையைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1991ஆம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது விழுப்புண் அடைந்திருந்து யாழ் - மருத்துவமனையில் வீரச்சாவெய்திய-

பாலேந்திரன் (குமாரசுவாமி பாலசுப்பிரமணியம் - நாவற்காடு, முள்ளியவளை - முல்லைத்தீவு

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட குமாரவேலியார் கிராமத்தைச் சேர்ந்த 2 தமிழிளைஞர்கள்.

1992ஆம் ஆண்டு வவுனியா - பம்பைமடுச்சந்தியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

லெப். ராதா (சட்டநாதபிள்ளை கேதீஸ்வரன் - 5-ம் வட்டாரம், நிலாவெளி - திருமலை)

வசந்தராஜ் (சின்னையா நாகேந்திரன் - கணேசபுரம் - வவுனியா)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/6090)

## திருநெல்வேலி

# சிறுவர் நிறைவாழ்வு இல்லத்தின் சொல்லாத செய்திகள்

"மூன்று வருடங்களாக இந்த இல்லத்தில் இருக்கிறேன். மத்தியானத்தில் சாம்பாரும் சோறும் அதுவும் அளவு சாப்பாடு. கோப்பையின் வெட்டோடு இருக்கும். ஒரு வருடத்துக்கு மேலாகத் தேநீருக்குச் சீனி கருவதில்லை. வருத்தம் வந்தால் பெரியாஸ்பத்திரிக்கு நடந்துதான் போகவேண்டும். குகதாஸ் ஐயா அவர்கள் ஒரு கொப்பியில் இரண்டு பாடங்கள் செய்யச்சொல்லியிருந்தார். கேட்டால் கண்டபடி பேசுவர் என்பதால் மற்றவர்கள் ஒன்றும் கேட்பதில்லை"

திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச்சங்க சிறார் இல்லத்தில் தங்கியிருக்கும் பெண்பிள்ளைகளை இருவருக்கு முன்னால் பொதுமுகாமையாளர் வே. குகதாஸ் கொடூரமான தண்டனை வழங்கியது தொடர்பாகவும் நிர்வாக ஒழுங்கீனங்கள் குறித்தும் அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தபோது,


### செல்வி இரத்தின சிகாமணி சரோஜா தேவி வயது 17:

எல்லோரையும் போலவே, சிறுவர் நல்வாழ்வு இல்லத்தில் தங்கியிருந்து, பக்கத்து முத்துத்தம்பி வித்தியாலயத்தில் ஆண்டு பதினொன்றில் படிக்கிறேன். பொதுமுகாமையாளர் குகதாஸ் ஐயாவைப் பற்றி நானும் தயாழினியும் மற்றப் பிள்ளைகளுடன் சேர்ந்து கதைத்ததற்காக அவரால் கடுமையாகத் தாக்கப்பட்டோம். காலை எட்டு மணி தொடக்கம் பின்நேரம் மூன்று மணி வரை பொதுமுகாமையாளர் எங்களை அடித்தார். அன்று மத்தியானச் சாப்பாடு வழங்கியவர்களுக்கு முன்னால் எங்களைச் சாதி இழுத்துப் பேசி அடித்தார். என்னையும் தயாழினியையும் முழங்காலில் இருக்க விட்டு உப்பும் சோறும் தந்தார். சாப்பிட்டு முடிய நாங்கள் சாப்பிட்ட கோப்பையை எங்கள் வாயில் கவ்வ வைத்தார். தலையில் தேங்காய் எண்ணெயை ஊற்றி விறகுக்குவியலில் ஏற்றிவிட்டு, இரண்டு தடிகளை ஒன்றாய்ச்சேர்த்து அடி விழுந்த பின்பு எங்களைத்தாக்க இரும்புக்கம்பியைக் கையில் தூக்கினார். கோகிலா ரீச்சர் சுசிலா ரீச்சர் காலில் விழுந்து நக்கச் சொன்னார் சுசிலா ரீச்சர் கவலையுடன் அந்த இடத்தை விட்டு ஓடிவிட்டார். எங்களைக் கொண்டு மலசலகூடத்தை கழுவச்செய்தார். இந்தத் தண்டனைகள் எல்லாம் மாணவர் மாணவிகள் மற்றும் வேலை செய்பவர்கள் முன்னிலையில் வழங்கப்பட்டன.

சரோஜாதேவியைச் சுற்றி மனதில் பலவித உணர்ச்சிகளுடன் அவரது சகபாடிகள் சுற்றி வளைத்து நின்றனர். அச்சத்தோடு கூடிய தயக்கத்துடன் அவர் சொன்னார்:

மூன்று வருடங்களாக இங்கு இருக்கிறேன் மத்தியானத்தில் சாம்பாரும் சோறும் அதுவும் அளவு சாப்பாடு கோப்பையின் வெட்டோடு இருக்கும். ஒரு வருடத்துக்கு மேலாகத் தேநீருக்குச் சீனி தருவதில்லை வருத்தம் வந்தால் பெரியாஸ்பத்திரிக்கு நடந்துதான் போகவேண்டும் குகதாஸ் ஐயா அவர்கள் ஒரு கொப்பியில் இரண்டு பாடங்கள் செய்யச் சொல்லியிருந்தார். கேட்டால் கண்டபடி பேசுவார் என்பதால் மற்றவர்கள் ஒன்றும் கேட்பதில்லை. காலைச் சாப்பாடு ஒரு சுண்டி பயறு அல்லது இரண்டு துண்டு பாண் மத்தியானத்திச் சாம்பாருடன் ஒன்றரைச் சுண்டிச் சோறு தான் தருவார்கள். இரவில் சோறு கிடைப்பதில்லை. சாம்பாருக்கு ஒரு தேங்காய் தான் பாவிப்பார்கள். மிச்சத்துக்குத் தேங்காய் மாதான் கரைப்பார்கள். இப்ப அரசே அப்படி தேவையான அளவு சாப்பாடு தருகிறார்கள். காலைச்சாப்பாடு பருப்புக் கறியுடன் பாண் சாம்பாருக்கு இரண்டு மூன்று தேங்காய் போடுகிறார்கள், மா கலப்பதில்லை. நாலு மூன்று மரக்கறியுடன் இப்போது மதியபோசனம் தரப்படுகிறது தேவையான அளவு கேட்டுச் சாப்பிடலாம்.

முன்பிருந்த முகாமையாளர் எங்களுக்குப் போதிய சாப்பாடு தருவதில்லை ஆனால் எங்கள் விடுதிக்கு முன்பாகவும் பல்கலைக் கழகத்திலும் கன்ரீன் நடத்தினார். பள்ளிக்கூடம் இல்லாத நேரங்களில்



## பேட்டி: மதன்

நாங்கள்தான் பார்சல்கள் கட்ட வேண்டும். இரண்டு மூன்று கறிகள் மற்றும் இறைச்சிக் கறியுடன் பல்கலைக்கழகத்துக்குச் சாப்பாட்டுப் பார்சல் அனுப்பப்பட்டது வெளியிலிருந்து இறைச்சிக் கறி சமைத்துக் கொண்டு வந்து பார்சலுக்குக் கட்டுவார்கள். எங்களுக்குச் சைவச்சாப்பாடு. தாங்கள் மீன், முட்டை, இறைச்சி எல்லாம் கலவைச் சாத்தி விட்டுச் சாப்பிடுவார்கள்.

### கனகு கஜமாலினி, வயது 1?

சொல்லப்போனால், எட்டு வருடங்கள் நான் இந்த இல்லத்தில் இருக்கிறேன். முத்துத்தம்பி வித்தியாலயத்தில் ஏ. எல் வகுப்பில் படித்துக் கொண்டு இருக்கிறேன் வீட்டிலிருந்து மண்ணெண்ணெய் கொண்டு வந்தால் பொதுமுகாமையாளர் அதனைப் பறித்து விடுவார். மற்று பரல் மண்ணெண்ணெய் கொண்டு வந்தார். இரண்டு நாள்கள் தான் விளக்கு எரிந்தது. மிகுதி என்னென்ன ஆகிப் போனதோ தெரியாது. ஓ. எல். பரீட்சையின் போது கூடப் புல்லுப் பிடுங்க விடுவார் றோட்டில் முழங்காலில் நிற்க வைப்பார். மரக்கறி வெட்டி வைத்து விட்டுப் பள்ளிக்கூடத்துக்கு நேரம் சென்று போனாலும் மத்தியானம் சாப்பிட வந்தால் எங்களுக்கு அந்த மரக்கறி சாப்பாட்டிற்குத் தரமாட்டார்கள். நவராத்திரியின் ஒரு நாளில் மச்சம் பிரேம் கடைச் சமுவத்தார்கள். தலைமுடி வளர்த்தவர் சண்முகலிங்கம் என்ற பெயர் ஒரு ஆசிரியை அவரது மனைவி. அவரது திருமணம் சம்பந்தமான வைபவமொன்றில் உணவு பரிமாற கூட எங்களை அழைத்துச் சென்றார்கள். இரவு பதினொரு மணிவரை நாங்கள் அங்கு வேலை செய்ய வேண்டியிருந்தது. மருத்துவ பீடத்துக்கு அருகாமையிலும் ஒரு வீட்டிற்கு இப்படிக் கூட்டிச் சென்று வேலை வாங்கினார்கள் அங்கும் எங்களைக் கட்டாயப்படுத்தி பொதுமுகாமையாளர் உணவு பரிமாற வைத்தார். பல்கலைக்கழக மாணவர் கன்ரீனுக்கும் எங்களைக் கூட்டிச் சென்று உணவு பரிமாற வைத்ததோடு சாப்பாட்டுக் கோப்பைகளையும் கழுவ வைத்தார். விடுதியில் இப்படி நெருக்கடி என்றால் நாங்கள் படிக்கும் முத்துத் தம்பி வித்தியாலயத்திலதான் எமக்கு ஆறுதல் கிடைத்தது. அந்த மாதிரியான பிரச்சினைகள் இப்போது எங்களுக்குக் கிடையாது நாங்கள் புதிய நிர்வாகத்தின் கீழ் அதிர்ஷ்டசாலிகள்.

### ஆர். சதீஸ்குமார், வயது 17 ஆர். தர்மராசா வயது 17

வருத்தத்தோடு, மிகப் பரிதாபமாகச் சொன்னார்கள்:

ஆண்கள் என்ற முறையில் எங்களுக்குப் பிரச்சினைகள் அதிகம் பொதுமுகாமையாளர் எங்கள் இல்லத்தில் பேக்கறி ஒன்று நடத்தினார்கள். மாலை 4.00 மணி தொடக்கம் மற்ற நாள் விடிய 6.00 மணி வரையில் பேக்கறியில் வேலை செய்ய வேண்டும். அதற்குப் பிறகுதான் காலைக் கடன்களை முடித்துவிட்டுப் பள்ளிக்கூடம் போக வேண்டும். பெண்பிள்ளைகளிடமும் சுழற்சி முறையில் வேலை வாங்கினார். கறிபணிஸ், ரீபணிஸ், பாண், கேக் எல்லாம் செய்தார்கள். ஆனால் கறிபணிஸ், ரீபணிஸ், கேக் ஆகியவைகள் எங்களுக்குச் சாப்பிடத் தரமாட்டார்கள். செயலாளர் சிவானந்த மூர்த்தியின் வீடு புத்தூரில். அவர் வீட்டுக்கு ஒரு முறை இருபது லீற்றர் மண்ணெண்ணெய் எமது இல்லத்திலிருந்து கொண்டுபோய்க் கொடுத்தோம். இதைவிட சண்முகலிங்கம் அவர்களுக்கு மரக்கறி, மண்ணெண்ணெய் கொண்டுபோக வேண்டும். கை இரண்டினையும் கட்டி எங்களைப் பூட்டி வைத்துக் கட்டுப்பாடாக பொதுமுகாமையாளர் எங்களை அடிப்பார். செயலாளர் சிவானந்த மூர்த்தியின் வீட்டுக்கும் எங்கள் இல்லத்திலிருந்து தென்னோலை, உருளைக் கிழங்கு ஆகியன கொண்டு செல்வது வழக்கம்.

சிறுவர் நிறைவாழ்வு இல்லத்துக்குப் பதில் பொது முகாமையாளராக நியமிக்கப்பட்டிருக்கும் திரு. ப. கணேசலிங்கத்தைச் சந்திக் கப்பகத்தில் உள்ள சைவ வித்தியா விருத்திச் சங்கக் காரியாலயத்துக்குச் சென்ற போது...மதியவேளை. அப்போதுதான வந்திருந்தார். குதூகலமாய் வரவேற்றார்.

திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச்சங்க சிறுவர் நிறைவாழ்வு இல்லத்தில் நான் இணைந்தது ஒருவகை இந்தப் பிள்ளைகளின் அவலநிலை கண்டு இந்த விடுதியில் பிள்ளைகளுக்கு ஒரு தொண்டராகக் கருதி பாடம் சொல்லிக்கொடுத்திருக்கிறேன். 1989-ல் இந்த இல்லத்தில் பாடம் கற்ற தி தயாளினி என்ற பிள்ளை இன்று பல்கலைக்கழகத்தில் கலைபீட முதலாம் ஆண்டு மாணவி இதுதான் இந்த இல்லத்துடனான எனது முதற் தொடர்பு. தொண்டு செய்த என்னை பொதுமுகாமையாளர் பணியினைப் பொறுப்பேற்று நடாத்தும் குழுவின் தலைவராக 16 12-1992 இல் நியமித்தார்கள். என்னுடன் வேறு இருவர் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் ஒத்துழைக்கவில்லை. இரண்டு கிழமைகள் ஏனோதானோ என்று வேலைசெய்து விட்டுப் போய் விட்டார்கள்.

நான் பதவியேற்ற அன்று மாலை முன்னாள் பொது முகாமையாளர் திரு வே. குகதாஸ் என் கண் முன்னால் லாண்ட் மாஸ்டரில் பொருள்களை ஏற்றி அனுப்பினார். மறுதினமும் உரம், சீனிமூட்டை, விவசாய உபகரணங்கள், பால்மா ஆகிய பொருள்களை ஏற்றிச் சென்றார். இவை பிள்ளைகளுக்கு உரிய பொருள்கள். என்னுடைய அனுமதி இல்லாமலேயே இக்கைங்கரியம் நடைபெற்றது 16-12-1992இல 21 தூக்கு விறகுக்கு வவுச்சர் போடப்பட்டுள்ளது. இல்லைத்துக்குப் பத்துத்தூக்கும் குகதாசன் வீட்டுக்குப் பதினொரு தூக்கும் போய்ச்சேர்ந்துள்ளன. இக்குற்றச்சாட்டை நான் தகுந்த ஆதாரங்களுடனும், ஆவணங்களுடனும் உறுதிப் படுத்தியுள்ளேன்.

குகதாசன் தனது காலப்பகுதியில் இரண்டு உணவுச்சாலைகளை நடத்திவந்தார் ஒன்று பக்கத்தில், மற்றது பல்கலைக் கழகத்தில் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் பெயரைப் பயன்படுத்தி எடுக்கப்பட்ட இந்த உணவுச் சாலையில் அசைவ உணவு தாராளமாகப் பரிமாறப்பட்டது. இரண்டு மூன்று கறிகளுடன் தரமான உணவுப் பார்சல்கள் 12 ரூபா முதல் 15 ரூபா வரை விற்கப்பட்டன. பக்கத்திலிருந்த உணவுச்சாலையிலும் மக்கள் விழுந்தடித்துக்கொண்டு வாங்கினார்கள். ஆனால் பிள்ளைகளுக்கு ஆன சாப்பாடில்லை. இந்த வியாபாரத்தில் வர்த்தகத் திணைக்களத்திற்கு ஒரேயொரு இலட்சம் ரூபாவுக்கு மேல் இன்னும் 65,000 ரூபா பாக்கியாக உள்ளது. இதுபோக சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் பெயரால் திருவிழாக்காலத்தில் நல்லூர் வீதியில் தைத்த ஆடைகளை விற்பனை ஒன்றை நடத்தினார். இந்த ஆடை விற்பனையால் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு செலுத்த வேண்டிய தொகை 1,44,154 ரூபா 75 சதம். இதை எப்படிச் செஞ்சிலுவைச் சங்கம் பெறப்போகிறதோ? பக்கப்பாக மன்னெண்ணெய் விற்பனை. இரண்டு நாள்களுக்குள் தான் விலகிக்கொள்ளும் திருமதி கணேசலிங்கம் அவர் விவகாரங்களை நிர்வாகத்தில் இருந்த மற்றவர்களும் சம்பந்தப்பட்டிருக்கிறார்களா என்பதைத் தெரிந்து கொள்ள மற்றவர்களைப் பற்றிப் பேச்சுக் கொடுத்தேன்.

> மனிதநேயம், சிறுவர் அடிப்படை உரிமை இவற்றை மக்களுக்கும் ஒவ்வொருவரையும் தலைகுனிய வைக்கும் சம்பவங்கள் திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச்சங்க சிறுவர் நல்வாழ்வு இல்லத்தில் நிகழ்ந்துள்ளன. நிர்வாக சபையும் பல வருடங்களாக ஆண்டுப் பொதுக் கூட்டத்தைக் கூடாமல் ஏதேச்சதிகாரமாக நடந்துள்ளது. உண்மைஎன்ன ?

மோசடிகள் நீண்டகாலமாக நடைபெறுவதாகக் கூறிய கணேசலிங்கம் அவை தொடர்பான பல ஆவணங்களை எமது பார்வைக்குச் சமர்ப்பித்தார்.

### விசாரணைக் குழுவின் பரிந்துரைகள்

எமது பண்பாட்டுக் கோலங்களைப் பாழ்படுத்தியவர், மற்றும் சிறார் பணத்தை அப்பட்டமாகவே மோசடி செய்தவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியும் வெகுஜனப்போராட்டம் ஒன்றை நடத்தப் போவதாகவும் சிறிலசிறி சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், பேராசிரியர் வி. சண்முகதாஸ், யாழ் இந்துக்கல்லூரி அதிபர் அ. பஞ்சலிங்கம், பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் வி. சிவசாமி ஆகியோர் உள்ளிட்ட இருபத்தைந்து முக்கியஸ்தர்கள் கையெழுத்திட்ட மகஜர் ஒன்று சைவவித்தியா விருத்திச் சங்கத்தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இதே காலப்பகுதியில் பொதுமுகாமையாளர் வே. குகதாஸ் மீதான குற்றச்சாட்டுகளை விசாரிக்க விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. விசாரணைக்குழு உறுப்பினர்களாக செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, மில்க்வைற் அதிபர் க. கனகராசா, கலாநிதி ப. கோபாலகிருஷ்ணஐயர், பொ. செங்கதிர்ச்செல்வன், க. கனகரெத்தினம் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

விசாரணைக்குழு அதன் பரிந்துரையில், வே. குகதாஸ் தொடர்ந்தும் பதவியில் இருப்பது பிள்ளைகளினதும் நல்வாழ்விற்கும், சங்கத்தின் பிரதான நோக்கமான பிள்ளைகளின் நல்வாழ்விற்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற காரணத்தால் அவரைத் தொடர்ந்தும் இவ் பதவியில் வைத்திருப்பது ஏற்றதல்ல என வலியுறுத்தியுள்ளது. பொதுமுகாமையாளர் வே. குகதாஸ் அவர்களை சபை விரும்பும் பட்சத்தில் சைவ வித்தியா விருத்திச்சங்கத்தின் வேறேதும் இடத்தில் பணிபுரிவதற்கு அனுமதி அளிப்பதற்குக் குழுவிற்கு ஆட்சேபனை இல்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சைவ வித்தியாவிருத்திச்சங்கச் சபையில் பல நிர்வாகக் குறைபாடுகள், பிரதானமாக சிறுவர் நல்வாழ்வு இல்லத்தைப் பொறுத்தவரை கவனிக்கக் கூடியதாக இருக்கிறது என்றும் பரிந்துரையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. முடிந்தவரை மிக விரைவில் ஆண்டுக் கூட்டத்தைக் கூட்டும் படியும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**ஈழநாதம்**
**மூன்றாவது ஆண்டு நிறைவுப்போட்டி**
**இரண்டாவது பரிசுபெறும் சிறுகதை**

# பசியல்ல தாகம்

## பத்மநாதன் கேதீஸ்வரநாதன்

''அம்மா ... அம்மா .'' அந்தக் குரல் சற்று வித்தியாசமாக ஒலித்தது. வீட்டில் அதை யரும் கவனித்ததாக தெரியவில்லை. வீடு காலை நேரத்தின் பரபரப்பில் இருந்தது. பையன் மீண்டும் ஒரு முறை குரலெழுப்பினான். இப்போது வீட்டின் முன்பக்கம் ஆக்கள் தோன்றினார்கள் அந்த வீட்டுக்காரர்களாகத் தான் இருக்க வேண்டும். தங்கள் வேலைகளுக்கு புறப்பட்டுக்கொண்டிருந்தார்கள். என்னப்பா இண்டைக்கு மோட்டார் சைக்கிளை வெளியே எடுக்கயில்லையே ஏன் ஏதாவது பழுதோ?'' அந்த வீட்டுப் பெண் தன் கணவரிடம் கேட்டா. ''இல்லையடபா ஒரு பழுதும் இல்லை. மண்ணெண்ண எல்லோ நூற்றி ஐம்பது ரூபா விக்குது'' அவர் பதிலளித்தார் அவர்கள் இன்னும் அந்தப் பையனை கவனிக்கவில்லை. அவன் அவர்களையே கவனித்துக் கொண்டிருந்தான். முதலில்பையனை கவனித்தது அந்த வீட டுக் குழந்தைதான். அது பெற்றோருட ன்வெளிக்கிட்டுநேர்சறிக்கு போவசற்கு தயாராக வாசலில் நின்று கொண்டிருந்தது. ''அப்பா'' என்று கூப்பிட்டு தெரு வாசல் நோக்கி கையை காட்டியது ' என்னடாப்பா என்ன வேணும்'' சற்று அலட்சியமாக கேடடார். ''இரண்டு நாளா சாப்பிட யில்லை. சரியாய் பசிக்குது'' பையன்மெதுவாகச் சொன்னான். ''ஏனடாப்பா கைகால் ஒழுங்காகதானே இருக்கு எங்கையாவது வேலை செஞ்சு சாப்பிடுறதுதானே'' சற்று உரத்துச் சொன்னார். மோட்டார் சயிக்கிள் புதிதாக இருந்தாலும் ஓடுவதறகு மண்ணெண்ணெ வேண்டுமென்று புரிந்த மனிதருக்குபையனுக்குகையும் காலும் மட்டும் இருந்தால் வேலை செய்து விடலாம் என்று எப்படி தோன்றியதோ. ' வீடடுக்குள்ள ஆச்சி இருக்கிறா. கேள் ஏதாவது தருவா எங்களுக்கு நேரம் போச்சு'' சொல்லிவிட்டு அந்தப் பெண் கணவனையும் பிள்ளையையும் அவசரடபடுத்தியது பிள்ளை சாப்பிட்டுக் கொண்டிருந்த பிஸ்கட்டினை இரண்டாக பிரிசது நடுவில் இருக்கும் இனிப்பினை அவசரமாகநக்கி விடடு மிச்சத்தை தூக்கி எறிந்து விட்டு சைக்கிள்பரில் ஏறிக்கொண்டது. எங்கிருந்தோ மூன்றுகாகங்கள்பறந்து வந்து. இரண்டு ஒவ்வொரு பாதி பிஸகட்டினை தூக்கிச் செல்ல ஒன்று ஏமாற்றத்துடனும் பறந்து சென்றது. அவர்கள் மூன்று பேரும் சென்று விட்டனர் பையனதெரு வாசலிலிருந்து இப்போது முற்றதிற்கு வந்திருந்தான்.

அவனுக்கு பத்து பன்னிரண்டு வயசுக்குள் தான் இருக்கும். வயதுக்கேற்றவாறுவாட்டசாட்டமாகத் தான் இருந்தான் ஆனால் களைப்பு முகத்தில் தெரிந்தது. உண்மையில் நடட்பதற்கே கஷ்டப்படுகின்றான் என்று பார்க்கும்போது புரிந்தது. முகத்தில் களைப்புடன் கவலையும் தெரிந்தது. அவனுடைய அளவிற்கு பெரிதான ஒரு காற்சட்டையும் சற்று சிறிதான ஒரு சேட்டும் அணிந்திருந்தான். உடுப்புகள் சற்று அழுக்கேறி இருந்தது. தலையில் புழுதி அப்பிக்கிடந்தது.

பையனை யன்னலுக்குள்ளால் கண்டதும் ஆச்சி குசினியிலிருந்து வெளியே வந்தா. மீண்டும ஒரு தடவை பையன் பசியைப்பற்றி சொல்லவேண்டியிருந்தது. பையனுடைய நல்ல காலம் ஆச்சி புத்திமதி எதுவும் சொல்லவிலலை அவவின வயதின் அனுபவமோ. இரக்க குணமோ என்னவோ பையனின் தோற்றத்திலிருந்துஅவன் பொய் சொல்லவில்லை என்று புரிந்து கொண்டா ''கொஞ்சம் பொறு பாண் இருக்கு. கூடச்சாப்பிட ஒண்டும்இல்லை மத்தியானத்திற்கு எண்டுவைக்கிற கறியோட தாறன்'' அவனுக்கு இருந்த பசியில் வெறும் பாணே கேட்டு வாங்கிச் சாப்பிட்டு இருப்பான். அவனுக்கு இந்தப் பழக்கம் புதியது. அதனால் இனி மேலும் அவசரப்பட்டு கேட்பது சரியல்ல என்று வாசலில் உட்கார்ந்து விட்டான்.

அவனுக்கு இப்போது பசியுடன் அப்பு பற்றிய எண்ணங்களும் கவலையை கொடுத்தன அவனுக்கு இன்னும் அப்புபற்றி எந்த தகவலும கிடைக்கவில்லை. இரண்டு தினங்களுக்கு முன்னர் நடந்த சம்பவங்களை எண்ணிப்பார்த்தான். அன்று இரவு படுத்து ஒரு மணித்தியாலம் தான் இருக்கும் திடீரென்று சீறி வந்த பொம்பர்களும், காதைப்பிளக்கும் ஓசையுடன் விழுந்து வெடித்த ஷெல்களும்,சூட்டுச் சத்தங்களும் அப்பப்பா இப்ப நினைத்தாலும் அவனுக்கு மேனி நடுங்கியது. ''ஆமி வெளிக்கிடுகிறானாம். எல்லோரும் ஓடுங்கோ'' என்ற குரலுடன்சனத்துடன் சனமாக வெளிக்கிட்டவன் தான். இரவு இரவாக நடந்து வந்து களைத்துப்போனவனை ஒருவரும் கவனிக்கவில்லை. மற்றவர்களுக்கு தங்கள் தங்கள் பிரச்சினைகள் வீட்டை விட்டிட்டு வெளிக்கிட்டது, வீட்டிலுள்ள பொருட்கள் தவறவிடப்பட்ட ஆக்கள். ஆடு மாடு. கோழி,தோட்டம்என்று எத்தனையோ. இவற்றுடன் அவனைக்கவனிக்க ஒருவருக்கும் முடியவில்லை. அவனும் சின்னப் பொடியன் தானே. எங்கே போறது எங்கு பதியிறது. ஒன்றும் புரியவில்லை.பள்ளிக்கூடம் கோயில் என்று அலைந்துவிட்டு இப்ப இங்கு வந்து நிற்கிறான்.

அவன்ர அப்பு கோயிலில் ஐயருக்கு எடுபிடிவேலைசெய்யிறவர். கோயிலில் விளக்குத் துடைப்பது,கூட்டுவது,கடைக்குப்போவது இப்படி எல்லா வேலையும் செய்வார் திருவிழா அபிஷேகம் இப்படி ஏதும் விசேட தினங்கள் என்றால் வேலை அதிகம் இருக்கும். இவனும் கூடமாட ஒத்தாசை செய்வான்.கோயிலும், கோயில் வீதியும் தான் அவனுக்கு வீடு. ஐயருக்கும் இவனில் நல்ல பிரியம். ஏதோ ஓகோ என்று இல்லாவிட்டாலும் சாதாரண வருமானம் வரும். கோயில் அவனுக்கும் அப்புவிற்கும் உணவிற்கோ மற்றைய தேவைகளுக்கோ கோயிலில் இருந்துகிடைப்பது போதுமானதாக இருந்தது. அப்பு கோயில் வேலையெல்லாம் முடித்துவிட்டு லேட்டாகத் தான் படுக்க வருவார். அன்றைக்கும் அப்பிடித்தான். அவன் படுக்க போகும்வரைக்கும் அப்பு வரவில்லை. சத்தம் கேட்டு திடுக்கிடடு எழும்பிப்பார்த்தால் அப்பு பக்கத்தில் இல்லை கொஞ்ச நேரம் என்ன செய்வது என்று தெரியாமல் நின்று முழுசினான் ''ஏண்டா நிற்கிறாய்ஓடடா'' என்று மற்றவர்கள் கத்திக் கொண்டு போவதைக் கேட்டு வெளிக்கிட்டு விட்டான் அப்பு கூட சொல்லியிருந்தவர் ஏதும் பிரச்சினை வந்தால் என்னைப் பார்த்துக் கொண்டு நிக்காதை நீ போ நான்பிறகு வந்துவிடுவேன் என்று ஐயரும் அப்புவு எங்கெயெண்டாலும் வெளிக்கிட்டு தான் இருப்பினம். ஒருவாறு தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டு காத்திருந்தான்.

அவனுடைய சிந்தனையை கிறீச்சென்ற கதவு திறக்கும் ஓசை கலைத்தது. வாசலைப் பார்த்தான். முதலில் தனக்கு போட்டியாக யாராவதுவந்து விடுவினமோ என்று பயந்த அவன், கையில் பேப்பருடன் வரும்பேப்பர்காரனைப் பார்த்ததும் ஆறுதலடைந்தான். பேப்பர் காரனைக் கண்டதும் ஆச்சி வெளியே வந்தா. ''என்னஇண்டைக்கு லேட்டா வாறாய் விடிய பேப்பரை காணலை'' என்று சத்தம் போட்டுட்டு ''இப்பதான்போகினம். வழியில அம்மா சைக்கிள்பழுதாய்ப்போச்சு'' சொல்லிக் கொண்டு பேப்பரை நீட்டினான். ஆச்சி பேப்பரை வாங்கிக் கொண்டு ''இன்னும் பத்து நிமிசத்தில் முடிச்சிட்டு தாறன்'' என்று சொல்லி விட்டு உள்ளே போனா.

மீண்டும் அமைதி வரஏதோ சிந்தனையிலிருந்த அவனை உள்ளே திடீரென பேப்பர் வாசிக்கும் குரலும் அதில் தங்கள் ஊரின் பெயர் அடிபடுவதும் ஈர்த்தது. குசினிக்குள்ளே இரண்டு வயதான பெண்கள் போலும். மற்றவ ஆச்சிக்கு பேப்பர் வாசித்து சொல்ல ஆச்சி தேங்காய் திருவிக் கொண்டிருந்தா ''.... பொம்பர் தாக்குதல் ஷெல் வீச்சு எட்டு பொதுமக்கள் பலி. புலிகள் இராணுவம் கடும் மோதல்'' எனற செய்தி கேட்டு பையன் சிந்தனை கலைந்தது. ஆவலாகமேலும் என்ன வாசிக்கினம் என்று எழுந்து நின்று கேட்டான். ''செத்த ஆக்களின்ர பெயர் போட்டிருக்கே'' ஆச்சி ஆவலாக கேட்டா யாரோ தெரிந்தவர்கள் அந்த ஊரில் இருக்கினமாம். ''ஓம்'' என்று சொல்லி விட்டு மற்றவ மிச்சத்தையும்வாசிக்கத் தொடங்கினா. முதலில் ஐயரின் பெயர் தான் இருந்தது. பையனுக்கு அந்த அதிர்ச்சியிலிருந்து மீளுவதற்குள் அப்புவின பெயரும் கேட்டது. பெயருடன் வயதும் போட்டிருந்தது. பையனுக்கு சந்தேகம் இன்றி நடந்ததை உணர்த்தியது. ''பார்த்திங்களோ வயசு வந்தவர்களையும் எல்லாம் சுட்டிருக்கிறாங்கள் இஞ்ச வந்தாலும்என்னை உங்களையெல்லாம் கூட விட மாட்டாங்கள் ஆச்சியின் குரலில் பயமும் கவலையு தெரிந்தது. மேலும் தங்கள் கோவிலடி வரை இராணுவம் முன்னேறியிருக்கு என்றும்அறிந்து கொண்டான்.

அவனுக்கு கண்களில்இருந்து கண்ணீர் வந்தது ஆனால் அவன் அழவில்லை பசி கூட மறந்து விடடிருந்தது அப்பு ஐயர் எல்லாம் கண்முன்வந்து போனார்கள் அப்புவிடம்அடி வாங்கியதும், அப்பு கோயில் வெள்ளைச்சாதம் ஊட்டிவிட்டதும் வந்து போனது தான் வெளிக்கிடுவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர்தான் பட்டம் வாங்க ஐயர் ஐந்து ரூபா காசு தந்தது ஞாபகம் வந்தது. தாங்கள் ஓடிப்பிடித்து விளையாடும் கோவில் வீதி, குளித்து கூத்தடிக்கும் கோயில் கேணி, மாங்காய் ஆயும் மாமரம் எல்லாம் கண் முன்னே தோன்றி மறைந்தது.

அந்தக் கோவிலடியில் எல்லாமாகஇவன்வயதையொத்த ஏழெட்டு சிறுவர்களுக்குமேல் இருந்தார்கள் எல்லாரிற்கும் இவன் தான்தலைவன் போல. இவன் சொன்னால்எல்லாரும் கேட்பார்கள். இவன் கூட இருந்தால், ஏதாவது பிழை நடந்தாலும் ஐயர் பேசமாட்டார் என்று மற்றவர்களுக்கு தெரியும் யாராவது புதுப்பெடியன் விளையாட வந்தால் இவனைக் கேட்டு விட்டுத் தான் தங்களுடன் சேர்த்து விளையாடுவார்கள்.ஒருகுட்டி ராஜா போல அந்த கோவிலடியில் அவன் விளங்கினான்.

இன்று அவனுடைய நிலை அவனுக்கே புரியவில்லை.இனி எங்காவது போனால் தன்னை யாராவது சேர்த்துக் கொள்வார்களோ தாங்கள் புதிதாக யாரும் வந்தால் எப்படிநடத்துவோம் என்று யோசித்துப் பார்த்தான்.புதிதாக வந்தால் அவனை கடைசியாகத் தான் ஆட விடுவார்கள். பந்து பக்கத்து பற்றைக்காணிக்குள் விழுந்தால் புது ஆள் தான் போய் எடுத்து வர வேண்டும். இனி யார் எனக்கு சாப்பாடு தருவார்கள். சரி சாப்பாடு தான் ஒரு நாளைக்கு ஒரு இடத்தில் என்று சமாளிக்கலாம். இன்னுமொருவர் அன்பான ஐயர் மாதிரி கிடைத்தாலுமகிடைக்கலாம்.ஆனால் என்னை மரியாதையாக நடத்துவார்களா. ''அகதிப் பெடியன்'' என்று தான் கூப்பிடுவான்களோ. தங்கள் கோவிலடியில் ''ராசன்'' என்றுமற்றவர்கள் கூப்பிட தான்நடத்திய ராச்சியம்தான் அவனுக்கு மீண்டும் மீண்டும் நினைவிற்கு வந்தது. அவனுக்கு பசி இப்பொழுது முழுவதுமாகமறந்து போயிருந்தது அவனது பூமி ஞாபகத்திற்கு வந்தது.

இரவு படுக்கின்றமண்டபம் இபப இடிஞ்சு போயிருக்குமோ. கோயில் வீதியெல்லாம் இப்ப குண்டும், குழியுமாக இருக்கும். ஏன் கோயில் கூட இடிஞ்சிருக்கும். அந்தக் கோயில் வீதியில் ஒரு பெரிய மாமரம் இருந்தது. அதன் காய் புளிக்காது. மிகவும் ருசியாக இருக்கும் பெரிய ஆக்கள் கூட இவங்களிடம் கேட்டு வாங்கி சாப்பிடுவினம் இப்பதான் அது நிறைய சின்னச் சின்ன பிஞ்சு பிடித்திருந்தது. இப்ப அதெல்லாம் முறிஞ்சு போயிருக்கும். இனி நான் எங்கட இடத்திற்கு போக முடியாதோ. ஒருக்கால் எண்டாலும் பார்க்க முடியாதோ. ஏன் முடியாது. எப்படியென்றாலும். ஒருக்கால் எண்டாலும் பார்க்கத்தான் வேணும்.

அவனுக்கு தான் கோயிலடியில் விளையாடிக் கொண்டிருக்கும்போது கையில் துவக்குடனும் யூனிபோமுடனும் போகும் அண்ணாமாரின் ஞாபகம் வந்தது. அவர்கள் கோயில் கிணற்றில் தண்ணீர் குடிக்க வருவார்கள். அவர்களில் சிலர் நாளடைவில் அவனுக்கு பழக்கமாகியும் விட்டிருந்தனர்.

அவன் தண்ணி அள்ளிக் கொடுப்பான். நல்ல மாங்காய் இருந்தால் கொடுப்பான். அப்ப ஓர் அண்ணா பகிடியாக கேட்டார் ''தம்பி நீ எங்களோட வாறியோ'' ''ஆ..ய்'' என்று மறுத்து விட்டிருந்தான். அபபோது அவனுக்கு விளையாட்டும் கோயிலும்தான் உலகமாக இருந்தது இன்று அவன் நிலை வேறு. அவனுக்கு பத்தோ பன்னிரண்டோ வயது என்றாலும் யோசிக்கக் கூடிய வயதுதான். இதுவரை யோசிக்க வேண்டிய தேவை அவனுக்கு வரவில்லை இன்று இருந்தது. யோசிக்கிறான். யோசித்து விட்டான் இப்ப அவனுக்குள் ஒரு தாகம் எழுந்திருந்தது. அதுவும் நெஞ்சில். முகத்தில் ஒரு தெளிவு வந்திருந்தது. அவன் தன் வருங்காலத்தை தீர்மானித்து விட்டான். அவனுக்கு இப்போது ஏன் இந்த வீட்டிற்கு வந்தனான் என்பதே மறந்து போயிருந்தது. அவனுக்கு இனி எங்கு போவதென்று தெரியும். புறப்பட்டு விட்டான.

உள்ளே குசினிக்குள் தொடர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்தார்கள்.

''புலிகள் தங்கள் இயக்கத்திற்கு பலவந்தமாக சிறுவர்களையும், முதியவர்களையும் சேர்த்து வருகிறார்கள் என்று கொழும்பில் ......''

---

**ஈழநாதம்**
**மூன்றாவது ஆண்டு நிறைவுப்போட்டி**
**இரண்டாவது பரிசு பெறும் கவிதை**

# புதுக்கீதை பிறக்குது ஈழத்திலே

## –வளவை வளவன்

வங்கக் கடலும் வளர் தமிழீழமும்
செந்திரு வானாய் ச்சிவந்து போனது
எங்கள் வாழ்வும் எம்முயிர் உடலும்
இங்கு அனலிடை மூழ்கி எழுந்தது.

சிங்கள மென்றொரு தேசத்து ஈனர்கள்
எங்கள் பகைவராய் தம்மையே மாற்றினர்
எங்கும் படைவிரி த்தெம்மை அழித்திட
கங்கணம் கட்டி க்கனலினில் வீழ்த்தினர்.

பிஞ்சு பூவொடு குஞ்சுகள் கூடினர்
அஞ்சிடா தவர் கொட்டம் அடக்குவோம்
எங்கள் தாயக மண்ணினை மீட்டிட
எங்கள் பகையது எங்கென த்தேடினர்

தணலேந்தி நின்றாலும் நீராக ச்சென்றார்
கனல்மூட்டி வைத்தாலும் அலையாகி ப்போனார்
கனவிற்குள் எமைவென்ற பகைவர்தன் நிலைமாற
கனவிற்கு வழியின்றி த்தூங்கம் கெடுத்தார்

கிலிகொண்டு எதிராளி படைவிட்டு ஓட
புலிவீரர் நிழல்மட்டும் தொடராகச் செல்லும்
எரிலாப்போர் புதியதொரு பரிமாணம் காணும்
உலகத்தின திசைஎங்கும் தமிழீழம் ஈர்க்கும்

உலகாளும் புதுவதன ·திருவுறையும் காட்சி
அலகாகும் வரலாற்றின் புதுயுகத்து உத்தி
மலரான திருமனதில் உரமேற்றி வைத்தோன்
பலமான தலைவனென்ன வரையறைகள் பூக்கும்

ஈகத்திலே உயர்தீரத்திலே மனமோகத்திலே எழு
வேகத்திலே புயல் கோபத்திலே எரி
தாகத்திலே தமிழீழமெனும் உயர் வேதத்திலேநறு
போதந்தரும் புதுக்கீதை பிறக்குது ஈழத்திலே.

## நிதி அமைச்சின் செயலாளரை அரச அதிபர் சந்தித்தார்

(கொழும்பு)

யாழ். குடாநாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் சிறிலங்கா நிதி அமைச்சின் செயலாளர் பாஸ்கரலிங்கத்தை சந்தித்து இங்குள்ள நிலைமையைத் தெளிவுபடஎடுத்துக் கூறியுள்ளார். என கொழும்பில் இருந்து எமக்குக் கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி சந்திப்பில் யாழ். அரச அதிபரினால் தெரிவிக்கப்பட்ட அனைத்து விடயங்களையும் தாம் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வருவதாகவும் தேவையேற்படின் அவரை ஜனாதிபதி சந்திக்கவுள்ளார் எனவும் பாஸ்கரலிங்கம் தெரிவித்துள்ளார் எனத் தெரியவருகின்றது.

[பா/.நி]

## வீரவணக்க கூட்டம்

சங்கானை வட்டத்தில் 2-ம் மாதம் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று இரவு 7.30 மணிக்குத் தொல்புரம் மத்தி சனசமூக நிலையத்தில் இடம் பெறவுள்ளது.

மேலும் மாவிச்சந்திப் பிள்ளையார் கோவில் முன்றலில் இன்றிரவு 7.30 மணிக்கு 2-ம் மாதம் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கான வீரவணக்க கூட்டம் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வுகளில் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## 'சாளரம்' வெளிவந்தது

[யாழ்ப்பாணம்]

சாளரம் இளையோர் திங்கள் இதழ் வெளிவந்துள்ளது. மார்ச், ஏப்ரல் மாதங்களுக்குரிய இந்த இதழில் தமிழேழசை ஒளிநாடா திரைப்படம் பற்றிய கட்டுரை ஒன்றும், தமிழீழத்தின் மக்கள் தொகை, மன்னார் மாவட்டத்தின் கல்வி நிலை- ஒரு நோக்கு, இலக்கியச் சோலையினம் போன்றவற்றுடன் வேணல் கிட்டுவைப் பற்றிய கவிகளை வென்ற வேகத்தில் கனங்களை வெல்றாய் என்ற வசனக் குறிப்புகளும் வெளிவந்துள்ளன.

இத்துடன் கவிதைகள், உளவியல் உலகம் போன்றவையும் வெளிவந்துள்ளன.

# நானாட்டானில் வீரச்சாவு



மேஜா அச்சுதன்



கப்டன் பிரவின்ராஜ்



லெப்டினன்ட் ராஜசேகர்



லெப்டினன்ட் செங்கோலன்



லெப்டினன்ட் மோகன் (பசில்)



லெப்டினன்ட் கடவுள்



2-ம் லெப்டினன்ட் இசையரசன்



2-ம் லெப்டினன்ட் திருமேனி



வீரவேங்கை பரசுராமன்



வீரவேங்கை காந்தன்



வீரவேங்கை கார்த்திகேயன்

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் ஆதரவில்

தென்மோடி நாடக மரபில்

யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் பெருமையுடன் வழங்கும்

## "சுதந்திர தாகம்"

[தென்மோடி நாட்டுக்கூத்தில் கட்டபொம்மன் வரலாறு]

ஆக்கம், நெறியாள்கை: ம. டே. சற்குணராசா

காலம்: 27-02-1993 சனிக்கிழமை பி. ப. 3-00 மணி

இடம்: யாழ் / பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கு

நுழைவுக்கட்டணம்: ரூபா 50/- ரூபா 25/-

விளம்பர அன்பளிப்பு:

"மழலை" வாழ்த்துகின்றது

உயிரோவியமான படப்பிடிப்புக்கு

"பேபி போட்டோ"

(புகைப்படக் கலை நிபுணத்துவ சேவை)

வளாகச் சந்தி-பலாலிறோட்- திருநெல்வேலி

[4349]

---

## 95-ம் நாள் நினைவலைகள்

ஈழமண் மரமாக 3 — 5 — 1973



ஈழமண் விதையாக 24 — 11 — 1992

## 2-ம் லெப்டினன்ட் கௌரி

[அமுதினி வீரகத்தி (அமு)

தோளசைந்து இடையசைந்து
தோள்மீது துப்பாக்கி சுமந்து
பூவாகி புஷ்பமாகி புன்னகைத்த அமுதினியம்மா
பார்த்திருந்தோம் பாதையோரம் - உன்
எழில் வதனம் காண்பதற்கு
மாழும் துயர் கடலில் மூழ்க வைத்து
பாதி வழி சென்றதென்ன
பலகவமது புகுந்து வெற்றிக்கனி பறித்தாயம்மா
பலாலி கிழக்கோர தொடர் காவலரண் தகர்ப்பிலே
தானுனை மண்மாதா முத்தமிட்டாளே!
சத்தங்கள் உன்னிடத்தில் சரணடைந்த நேரமதில்
சொந்தங்கள் உனை கொண்டாடும் காலமதில்
வந்தனங்கள் கூறி வரவழைத்த ஈழமதில்
வழிந்தோடும் விழிநீரில் உனை வலைபோட்டு
தேடுகின்றோமம்மா
சூழ்ந்து கொண்ட இருள் விரட்டி
சுதந்திர ஒளி ஏற்றும் வரை - இங்கு
வேங்கைகள் விழிகண்மூடி தூங்கிடாதம்மா
கௌரியோடு களமாடி களப்பலி கண்ட
வேங்கைகள் அனைவரையும் நினைவு கூருகின்றோம்

இன்று எமதில்லத்தில் நடைபெறும் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு சக போராளிகளையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

முரளி வீதி,
ஆவரங்கால்.

இங்ஙனம்
கௌரி குடும்பத்தினர்

[4350]

யா/உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்

## பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

இடம்:- யா/உசன் இராமநாதன் ம.வி மேற்கு மண்டபம்

காலம்:- 27-02.93 சனிக்கிழமை காலை 9.00 மணி

நிகழ்ச்சி நிரல்

1. மங்கள விளக்கேற்றல்
2. தேவாரம்
3. மௌன பிரார்த்தனை
4. தலைவர் உரை
5. போசகர் உரை: கொத்தணி அதிபர் திரு. க. பேரம்பலம் (யா/ உசன் இராமநாதன் ம. வி.)
6. நிர்வாக சபை அங்கத்தவர் தெரிவு
7. பாடசாலை அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடல்
8. நன்றியுரை

பாடசாலை பழைய மாணவர் அனைவரையும் தவறாது சமுகமளிக்கும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

தலைவர் செயலாளர்

(இ 6081)

---

ஓம் விராட் விஸ்வப் பிரம நம

யாழ். மாவட்ட நகைத் தொழிலாளர் சங்கம்

## அங்குரார்ப்பணக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும்

யாழ். மாவட்டத்தை வதிவிடமாகக் கொண்ட அனைத்து நகைத் தொழிலாளர்களையும் ஒருங்கிணைத்து அவர்களது நலன் பேணுவதற்காக மேற்படி அமைப்பை உருவாக்க எண்ணியுள்ளோம். எனவே அனைத்து நகைத் தொழிலாளர்களையும் தவறாது சமுகம் அளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இடம், யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபம்

காலம்: 27-02-1993 சனிக்கிழமை பி. ப. 2.30

விடுதலைப் புலிகள் அரசியற்துறை உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரையாற்றுவர்.

(4337) அமைப்புக்குழு

---

நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம்

## பொதுக் கூட்டமும், புதியநிர்வாகிகள் தெரிவும்

★ 28. 2. 93 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2. 00 மணி.

★ கல்வியங்காடு சட்டநாதர் வீதி, இளங்கலைஞர் மன்ற கலாமண்டபம்.

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட நல்லூர் பிரதேசத்தை சேர்ந்த அனைத்து வர்த்தகர்களும் குறிப்பிட்ட நேரத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சு. தனபாலசிங்கம் (செயலாளர்) என். கே. குலசிங்கம் (தலைவர்)

(இ/6088)

---

## அலுவலகம் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்க அலுவலகத் திறப்புவிழா இன்று காலை 9 மணிக்கு உரும்பராய் சந்தியில் (சிவகுமாரன் சிலை அருகில்) நடைபெறவுள்ளது

இத் திறப்புவிழா நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட தொழிற்சங்கப் பொறுப்பாளர் திரு. இமயவன் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட தொழிற்சங்க பிரமுகர்களும் கலந்து கொள்கின்றனர்.

தொழிலாளர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் இவ் விழாவில் கலந்துகொள்ளுமாறு கிராமிய உழைப்பாளர் சங்க அமைப்புக்குழு கேட்டுள்ளது.

## ஆட்கொணர்வு மனுத்தாக்கல்

பம்பலப்பிட்டி அகதி முகாமில் தங்கியிருந்த போது பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்பட்ட போக்குவரத்துச் சபை பாதுகாப்பு ஊழியரான செல்லத்துரை மோகன் (வயது 26) என்பவரை விடுதலை செய்யுமாறும் இல்லையேல் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறும் கோரி அவரது தாயார் ஆட்கொணர்வு மனுவொன்றை மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

இவர் 1991. 07. 18ஆம் திகதி பம்பலப்பிட்டி அகதி முகாமில் தங்கியிருந்த போது பம்பலப்பிட்டி பொலிசாரால் கைது செய்யப்பட்டு களுத்துறை புதிய சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

செங்கலடியைச் சேர்ந்த கந்தையா முத்துலட்சுமி என்ற பெண், சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தி மூலம் இந்தமனுவை தாக்கல் செய்திருக்கிறார்.

## இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்

உரும்பராய் இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை சனிக்கிழமை பிற்பகல் ரண்டு மணியளவில் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது. இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் துரை. தியாகராசா அவர்களும் இ. சிவானந்தன் அவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

---

## முக்கிய அறிவித்தல்

பொதி சுமக்கும் சகல வாகன உரிமையாளருக்கும்

உள்ளூர் வெளியூர் சேவையில் ஈடுபடும் சகல பொதி சுமக்கும் வாகன உரிமையாளருக்கான கலந்துரையாடல் 28-02-1993 ஞாயிற்றுக்கிழமை காலை 10 00 மணிக்கு கோண்டாவிலில் உள்ள அரசியல் துறை, யாழ். மாவட்ட செயலக பணிமனையில் நடைபெறவுள்ளதால், சகல பொதி சுமக்கும் வாகன உரிமையாளர்களையும் தவறாது சமுகமளிக்கும்படி வேண்டுகிறோம்.

வடபிராந்திய பொதி சுமக்கும் வாகன சங்கம்

(4344)

---

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் யாழ்மாவட்டம்

## முக்கிய அறிவித்தல்

சகல தனியார் கல்வி நிறுவனங்கள் பிரத்தியேக வகுப்புகள் கவின்கலைகள், கணனி வகுப்புகள். தட்டச்சு, சுருக்கெழுத்து. தொழில்நுட்பக்கல்வி வகுப்புகள் 10 பேரைவிடக் குறைந்த மாணவரைக் கொண்ட வகுப்புகள் ஆகிய அனைத்தும் பதிவு செய்து கொள்ளவும் முன்னர் பதிவு செய்தவர்களும் பதிவு செய்து கொள்ளவும். ஆவணச் செலவு 40 ரூபா

வடமராட்சி :- பீக்கோன்

வதிரி கரவெட்டி, (வடமராட்சி மகளிர் கல்லூரி அருகாமை) 26-2 93 — 5-3-93 வரை 8 மணிமுதல் 4 மணிவரை.

தென்மராட்சி

தென்மராட்சி மாணவர் அமைப்புக் காரியாலயம் சாவகச்சேரி. 26-2-93 — 5-3 93 வரை திங்கள், புதன், வெள்ளி பி. ப. 3 - 6 மணிவரை.

★ யாழ்ப்பாணம், பண்டத்தரிப்பு, மருதனாமடம் ஆகிய கோட்டங்களுக்கு 26- 2- 93 — 5 3 93 வரை நீடிக்கப்பட்டுள்ளது. நேரம் 9 மணிமுதல் - 3 மணிவரை ஆவணச் செலவு 50 ரூபா.

பொதுச் செயலாளர்
யாழ். மாவட்டம்

(சி- 6092)

---

## பிறந்த தின வாழ்த்து



செல்வன் கிருஷாந் செல்வன் பிரஷாந்

கரவெட்டி மேற்கைச் சேர்ந்த இராசசேகரம் (பச்சி) யோகராணி தம்பதிகளின் புத்திரர்கள் இ. கிருஷாந் மூன்றாவது பிறந்த நாளையும், இ. பிரஷாந் இரண்டாவது பிறந்த நாளையும் இன்று (26. 02. 1993) கரவெட்டியிலுள்ள தமது இல்லத்தில் மிகச் சிறப்பாக கொண்டாடுகின்றனர். இவர்களை அப்பா, அம்மா, பேரன்மார், பேர்த்திமார், பெரியம்மாமார், பெரியப்பாமார், அக்காமார், அண்ணாமார், அண்ணிமார், சித்தப்பாமார், சித்திமார், சட்டநாதர் கோவிலைச் சேர்ந்த சறோஜா அத்தை குடும்பத்தினர், கோப்பாயைச் சேர்ந்த மாமா, அத்தை, மச்சாள்மார், மச்சான்மார், அரசடியைச்சேர்ந்த ராதா அத்தை குடும்பத்தினர். பிரான்சில் வசிக்கும் கோபால்மாமா, ராஜா மாமா, குட்டிமாமா, பெரியப்பா ஆகியோர் சகல கலைகளும் பெற்று பல்லாண்டு காலம் சிறப்புற வாழவேண்டுமென வாழ்த்துகின்றனர்.

(4339) -குடும்பத்தினர்

---

## பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன.

1. தன்னியக்க பிளேட்டன் இயக்குநர்
Automatic Platen Machine Minder
2. தன்னியக்கமற்ற பிளேட்டன் இயக்குநர்
Semi Automatic Platen Machine Minder
3. தன்னியக்க சிலிண்டர் இயக்குநர்
Automatic Cylinder Machine Minder
4. தன்னியக்கமற்ற சிலிண்டர் இயக்குநர்
Semi Automatic Cylinder Machine Minder
5. வெட்டு இயந்திர அனுபவத்துடன் கூடிய புத்தகம் கட்டுபவர்கள் (Binders)
6. இலக்கமிடுதல், கோர்த்துக்கட்டுதல் (Binders) முதலிய வேலைகளில் அனுபவமுள்ளோர்
7. அச்சுக்கோப்பாளர்கள்

தகுதியுடையோர் அனுபவச்சான்றுகளுடனும் சுயவிபரங்களுடனும் 28-02-93 ஞாயிறு காலை 9-00 மணிக்கு நேரில் வரவும்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். (இ)

பொது முகாமையாளர்
ஈழநாதம்

# தலைவர் பிரபாகரனுக்கு தொண்டா விடும் தூது

பாலகுமாரன்

சிறிலங்காவின் அரசியல் வானில் நிரந்தர இரட்டை வேட நட்சத்திரமாக இன்று வரை திகழ்பவர் தொண்டமான் ஒருவர் தான் அமைச்சராக - அதேசமயம் தொழிற் சங்கத் தலைவராக - பேரின வாத அரசின் பிரதிநிதியாக- அதேசமயம் தமிழரின் பாது காவலனாக - சமகால முரண்பட்ட பாத்திரங்களில் அவர் தோற்றமளித்தார். இது அவரது அரசியல் வித்தகமா? அல்லது அரசியல் நயவஞ்சகமா? இதுபற்றி அவரிடமே கேட்டால், அதிலென்னதவறு என்பார். இவ்வரசியல் மனோபலம் கருதியே இற்றை வரை அவரது அரசியல் எதிர்காலம் குறித்துஎவரும்வினாவெழுப்பவில்லை. ஆனால் இன்று தொண்டமானின் பின் யார் என்கிற கேள்வி எழத் தொடங்கி விட்டது. அதற்கு காரணம் இல்லாமலில்லை. கடுமையான நீரிழிவு நோயைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் அவருக்கு வயது 80 ஆகிறது. இவ்வுலகில் எவரும் நிரந்தரம் இல்லையென்பது அவருக்கோ அவரது நண்பர்கட்கோ அல்லது எதிரிகட்கோ தெரியாத விடயமாகஇராது. அத்தோடு இன்று அவரது மலையக தேயிலைத் தோட்ட சாம்ராச்சியமும் முன்னர் போல் வலுவாக இல்லை. பல ஊடுருவல்கள் அங்கே நடந்து முடிந்து விட்டன. எல்லா அரசியல் தலைவர்களைப் போலவே மாற்றாரிடம் தனது இ. தொ. கா. ஆதிக்கம்போவதைதொண்டா விரும்பவிலலையென்பது செல்லச்சாமி ஓரங்கட்டப்பட்டதிலிருந்து புரிகிறது. இப்போது தனது பேரனை தனக்குப் பின் தலைவராக்க முயல்கிறார் என்பதே அண்மையில் அவரிடமிருந்து விலகியோர் வைக்கும்முதல் குற்றச்சாட்டு. விலகியோரில் முக்கியமானவர் இராமையா. இவர் தனது பகிரங்க கடிதத்தில் ''சருவாதிகாரப் போக்கினை கடைப்பிடித்தல்'' ''குடும்ப ஆதிக்கத்தை பேணல்'' ''மற்றவரின் உழைப்பை சுரண்டிவிட்டு சக்கையானபின் தூக்கிவீசல்'' என பாரிய குற்றச் சாட்டுக்களை முன் வைத்துள்ளார். இனி இ. தொ. கா அழிந்து படும் என அவர் கூறுவது மிகையானதாக இருந்தாலும் அதில் அர்த்தம் பொதிந்திருப்பதாக கருதவேண்டியுள்ளது.

எனவே இத்தகைய பின்னணியிலே கடந்த வருட முற்பகுதியிலிருந்து தமிழீழ தேசியப் பிரச்சினையில்தொண்டா காட்டும் ஆர்வத்தை கவனிக்க வேண்டும். இவை எல்லாவற்றிற்கும் மேலாக தலைவர் பிரபாகரனுக்கு எழுதிய மடலில் ''உலகம் வியக்கும் சரித்திரத்தை தமிழர் படைத்தே தீருவார்கள் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை நல்லதோர் வருங்காலத்தை நோக்கி இக்கடிதத்தை அனுப்புகிறேன்'' என்கிறார். இம்மடல் தொண்டமானின்பெரும் அரசியல் நடவடிக்கையொன்றின வெளிப்பாடாகும். காலத்திற்கு காலம் தொண்டாவின் அரசியல் வாழ்வில் புயல்கள் வீசிய போது அவர் அவற்றினை கையாள பயன்படுத்திய அவரது அணுகுமுறைகளை அறிவதன் மூலமே தற்போதைய தொண்டாவின் அரசியல் நகர்வினை அறிதல் முடியும்.

இற்றை வரை தனது அரசியல் தொழிற் சங்கத் தலைமையை தக்க வைக்க இவர் கையாண்ட அணுகு முறைகளை (அவரது துருப்புச் சீட்டுக்களை) முடிந்தளவு பின் வருமாறு வகைப்படுத்தலாம்; பாரிய தொழிற்சங்க மொன்றினை (ஒரு கட்டத்தில் 6 இலட்சத்துக்கு மேல் உறுப்பினர் கொண்டிருந்த) தனது பிடியிலிருந்து வழவாது வைத்திருந்தலோடு அதனை மலையக மக்களின் ஒரே தேசிய இயக்கம் என்று பாவனைப்படுத்தியமை; இந்திய அரசுகளோடு தொடர்புகளை பேணி தனக்கும் இந்தியப் பலம் பின்னால் இருப்பதான தோற்றத்தை கொடுத்தமை; மூன்றாவதாக அவரது தமிழீழ தமிழர் குறித்ததான அக்கறை பறறிய பிரதிமை. முதலிரண்டையும் பயன்படுத்தி மலையகத்தில் ஐக்கியதேசியக் கட்சியிலும் தனது நிலையை உறுதிப்படுத்தினார் மூன்றாவதை ஐக்கிய தேசியக் கட்சி பதவி அற்ற நிலையில் சுதந்திரக் கட்சி மூலம் வரும் எதிர்ப்புக்களை சமாளிக்கும் கவசமாகவும் தமிழர் அமைப்புக்கள் மலையகத்தினுள் உட்புகுந்து பலம் பெறுவதைதடுக்கும் வேலியாகவும் பயன்படுத்தினார். அவரது முதலாவது அணுகுமுறை இன்று மிகவும் கடுமையான கண்டனத்திற்குள்ளாக்கப்படுகிறது. அவரிடமிருந்து பிரிந்தோர் அவர் மலையகத் தொழிலாளர் சக்தியை தனது சுயநலனுக்கு பயன்படுததியமை; தொழிலாளர்கள் உரிமைப் போராட்டங்களை மழுங்கடித்தமை, எதையும் முதலில் கடுமையாக எதிர்ப்பது போல் பாவனை காட்டி இறுதியில் பின்வாங்குகின்றமை. (சிறிமா, சாத்திரி உடன்படிக்கையை முதலில் கடுமையாக எதிர்த்தமை, பின்எதிர்பபோர்சொத்துக்கள் பறிமுதலாகும் என சட்டம் வர, போராட்டத்தினைகை விட்டமை இதற்கொரு உதாரணமாக காட்டப்படுகின்றது). இன்றுதனது நலனுககாக மலையகத்தொழிலாளர் சக்தியை சிதறடித்து மலையகத்தை படிப்படியாக ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்குப் பெட்டியாக தாரை வார்த்துக் கொடுத்தமை என அவரது அரசியல் எதிரிகள் இவரை வன்மையாக குற்றம் சாட்டுகின்றனர்.

இவை எவ்வாறு இருப்பினும் தொண்டமான் தமிழர் நலன்குறித்த தான அணுகுமுறைசமகாலமுக்கிய நிகழ்வாகின்றது, 1970ம் ஆண்டின்பின் சுதந்திரக்கட்சி பதவிக் காலத்தில் அவர் தன்னை தமிழர் விடுதலைக் கூட்டணியோடு இனம் காட்டினார். 1976 வட்டுக்கோட்டை மாநாட்டில் (அவர் வராவிட்டாலும், கூட்டணித் தலைவருள் ஒருவராகதெரிவானார். ஆனால் எக்கட்டத்திலும் அவர் தமிழீழ கோரிக்கைக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை. இது அவரது சாணக்கியத்தனமாகும். ஏனெனில் இக்கால கட்டத்தில் மலையகத்தை என்னோடு விடடுவிடுங்கள் என விடுதலைக் கூட்டணியோடு பேசி வெற்றிகண்டார். ஏனென்றால் அப்போது தமிழரசுக் கட்சியின் தொழிற்சங்கமான இலங்கைத் தொழிலாளர் கழகம் வேகமாக மலையகத்தில் வளர்ந்து வந்தது. அவ் வளர்ச்சி இத்தோடு தடைப்பட்டது தமிழர் விடுதலைக் கூட்டணிச் சின்னத்தில் போட்டியிடஇவர் மறுத்தார். ஆனால்1977-ம்தேர்தலில்நுவரரெலியா, மஸ்கலியாதேர்தல் தொகுதியில் இவர் மூன்றாவது எம்பியாக ஆவது வருவதற்கு இத்தொகுதியினர் 6000 வடஇழக்கு தமிழரின் 18,000 வாக்குகளில் கணிசமானபங்கு இவருக்கே (ஒருவருக்கு3 வாக்கு)சென்றதே காரணம். அன்றேல் இவர் தோற்றிருப்பார். இத்தேர்தலில் கூட்டணி இவரை ஆதரித்து பிரசாரம் செய்தது பின்னர் தேர்தல் முடிய தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் ஒருவர்அமைச்சர்ஆனார். இன்னொருவர் எதிர்க்கட்சித் தலைவர் ஆகும் புவலம் நேர்ந்தது. அத்தோடு தொண்டாவின்தமிழர் மீதான அக்கறையும் அப்போதைக்கு அற்றுப் போயிற்று. இவையெல்லாம் தொண்டாவின் அரசியல் வாழ்வின் சில பக்கங்கள்.

ஆனால் இன்று முன்னைய காலங்களைப் போல் வலுவாக அவரும் இல்லை. அவரது தொழிற்சங்கமும் இல்லை இனியும் தொடர்ந்து அவரால் அல்லது அவரது வாரிசால் மலையக மக்கள் ஒட்டுமொத்த வாக்குகளை வாரிக் கொடுக்க முடியுமா என்பதே இன்றைய கேள்வி. முன்னர் எத்தனையோ பிளவுகளை சந்தித்தவர்தான் தொண்டா 1956-ம் ஆண்டுஅஸீஸ் வெளியேறிஜனநாயக தொழிலாளர் காங்கிரசை அமைத்த போதும்(இவரோடுC V.வேலுப்பிள்ளை, நடேசன், ரொசாரியோ பெர்ணான்டோ போன்றோரும் வெளியேறினர்) பின்னர் வெள்ளையன் வெளியேறி தேசிய தொழிலாளர் சங்கத்தை அமைத்த போதும் சரி தொண்டாவை அசைக்க முடியவில்லை. ஆனால் இன்று நிலை வேறு. அண்மைககாலத்தில் இ தொ. காவின்இளந்தலைவருள்ஒருவரான சந்திரசேகரன் விலகிய போது தொண்டாவிற்கு தலைவலி தோன்றியது. ஏனெனில் சந்திரசேகரன் வெறுமனே தொழிற்சங்க ரீதியில் மட்டுமன்றி மலையக மக்கள் தேசிய நலன் (மலையக மக்கள் தனித்தேசியம் என்பது அவரது மலையக மக்கள் முன்னணியின் கொள்கை குறித்தும் தமிழீழ விடுதலைப் போராட்டம் குறித்தும் சுய ஆர்வமும் அக்கறையும் மட்டுமன்றி செயற்பாடுகளையும் கொண்டிருந்தார். இவர் முன்னர் தமிழ் ஈழ அமைப்புக்கள் சிலவற்றோடு தொடர்கள் வைத்ததாகவும் பின்னர் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளோடு இவர் தொடர்புகளை வைக்கமுயன்றார்என்றும் அரசியல் அரங்கில்பேசப்பட்டது. இவர் கைதானது (கொழும்பு ஜே ஒ.சிகுண்டு வெடிப்பு சம்பவம்) பற்றி தொண்டா நிம்மதியடைந்திருந்த போதும் சந்திரசேகரனை விடுதலை செய்யக்கோரி தொழிலாளர் போராட்டம் நடத்தியது அவருக்கு பலத்த அடியாகவே விழுந்தது. இதுபோலவே மிக அண்மையில் வெளியேறிய இராமையா உட்பட்ட 35 இடைநிலைஇ.தொ. கா. அதிகாரிகளும் (இவர்கள் தமக்கு 15,000 உறுபபினர் ஆதரவுண்டு என்கின்றனர்) புதிய தொழிற்சங்கம் அமைப்பதை விட்டு தொண்டாவின் அரசியல் எதிரியான காமினியோடு சேர்ந்தது தொண்டாவிற்கு உவப்பான விடயமாகாது.

இவை எல்லா வற்றையும் விட இவரைப்பயன்படுத்தி இவரது பாணியிலே பாரிய தொழிற் சங்கமொன்றை இவரது கோட்டைக்குள்ளேஐ தே. கட்சி கட்டி முடித்துவிட்டது ஏனெனில் மலையக தொழிலாளியால் இவருக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையே வேறுபாடுகாண முடியவில்லை 1977 ஆம் தேர்தலில் முதல் எம்பியாக காமினிவர தொண்டா பெருமுயற்சி செய்தே மூன்றாம் எம்பியானவர். அப்போது தொண்டமானின் சின்னமான சேவலுக்கு வாக்களிக்குமாறு கோரப்பட்டபோது தொழிலாளர்கள் சிலர் ''அப்போது நம்ம சின்னம் யானை இல்லீங்களா?'' என்று கேட்டு குழப்பினர். குழம்பியகுட்டையிலே மீன் பிடித்தது ஐ.தே. கட்சி பலன் 1989 ஆம் தேர்தலில் 55,000 மலையகத் தமிழரைக் கொண்ட நுவரெலியா மாவட்டத்தில் ஒரு இ தொ கா உறுப்பினராவது தெரிவு செய்யப்படவில்லை அதுபோலவே 1981 ஆம்ஆண்டில் தொண்டமான் ஐ தே கட்சி அரசில் சேர்ந்தபின் அவரது தொழிற்சங்க உறுப்பினர் தொகை குறைந்து 2 இலட்சத்து 45 ஆயிரமாகியது. அது படிப்படியாக மேலும் குறைகின்றது இப்போதுஉறுப்பினர்தொகை 130,079 என அண்மையில்வெளியேறியோர் வெளிப்படுத்தியுள்ளனர். இன்று மலையகத்தின் பெரிய தொழிற்சங்கம் காமினியால் கட்டி வளர்க்கப்பட்ட ஐ. தே. கட்சியின் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கமேயாகும். கட்சி விலகிய காமினி இப்போது D.U.N.Fகட்சியின் மலையக தொழிற்சங்கத்தை கட்டி வளர்ப்பதில் முழுக்கவனமெடுத்து வருகிறார். தொண்டாவின் பரம அரசியல் வைரி காமினியேயாவார். 1983 ஆம் ஆண்டில் அவர் அமைச்சராக இருந்தபோதே தொண்டமானைபார்த்து ''நாயுண்ணியானதுநாய்மீதுஇருந்துகொண்டு அதன் குருதியை உறிஞ்சிக் குடித்து உயிர் வாழ்கின்றது. ஆனால் அது என்னமோ தன்னால்தான் நாய் உயிர்வாழ்கிறது என நினைக்கிறது. அது போலவேஇ.தொ.காஎன்றவர் ஆயிற்றே. அத்தோடு பிரேமாவின் தோட்டநிர்வாகங்களை தனியார் கம்பெனிக்கு தாரை வார்க்கும் திட்டமும் தொண்டமானுக்கு (தனது தோட்ட இலாபத்தைப் பெருக்க உதவினாலும்) அவரது தொழிற் சங்கத்தை மேலும் மட்டுபபடுத்தி தொழிலாளர்உழைப்பை மிகக் கடுமையாக சுரண்டவே பயன்படும்.

இவற்றையெல்லாம் பார்க்குமிடத்து மலையகத்தில் தொண்டாவின் தொழிற்சங்க சாம்ராச்சியம் சரிந்து வருவது தெளிவாகின்றது சரிந்து வரும் இச்சாம்ராச்சியத்தை கட்டிக் காப்பதற்கு தமிழீழ அரசியலில் தீவிர அக்கறை காட்டிவரும் தொண்டா தலைவர் பிரபாகரனை ஒரு துருப்புச்சீட்டாக பயன்படுத்த முனைகிறாரபோலும் தொண்டாவின் இக் காய் நகர்த்தலை விடுதலைப் புலிகளும் மிக உன்னிப்பாகவே அவதானித்து வருகின்றார்கள்.

## உங்கள் நினைவிற்கு!

1. தொலைக் காட்சியைக் கண்டு பிடித்தவர் யார்?
   ஜோன் பயர்ட்
2. தொலைபேசியைக் கண்டு பிடித்தவர் யார்?
   இரகம் பெல்
3. தையல் மெஷினைக் கண்டு பிடித்தவர் யார்?
   சிங்கர்
4. தட்டச்சுப் பொறியைக் கண்டு பிடித்தவர் யார்?
   மற்றகோபர்
5. மோட்டார் காரைக் கண்டு பிடித்தவர் யார்?
   கால்பென்ஸ்
6. ராடர் கருவியைக் கண்டு பிடித்தவர் யார்?
   ரெயிலரும், யங்கும்
7. பரசூட்டைக் கண்டு பிடித்தவர் யார்?
   கனேரிஸ்
8. நீர் மூழ்கிக் கப்பலைக் கண்டு பிடித்தவர் யார்?
   பஸநெல்
9. அணுகுண்டு எப்போது கண்டு பிடிக்கப்பட்டது?
   1945ஆம் ஆண்டு
10. உலகில் பெரிய நாடக ஆசிரியராகக் கருதப்படுபவர் யார்?
    வில்லியம் ஷேக்ஸ்பியர்

தொகுப்பு
வினோ

## மனிதனின் மிகப் பெரிய சாதனைகள்

### தொடர்ச்சி II

1) இந்தியா நாட்டைச்சேர்ந்த ஜே. சி போஸ் என்பவரால் அமைக்கப்பட்ட ''கிறெஸ் கோகிறப்'' வளர்ச்சிப் பதிவுக்கருவி தாவரங்களின் வளர்ச்சியை 10 000,000 மடங்கு பெரிதாக்கிக் காட்டக்கூடியது இது உலகத்தில் புகழ்பெற்ற ஓர் கருவியாகும்
2) செவ்வாய் சூரியனில் இருந்து நான்காவது கோளாக அமைந்துள்ளது. மூன்றாவது கோள் நமது பூமியாகும். சூரியனிலிருந்து செவ்வாய் '1417' இலட்சமைல் தூரத்தில உள்ளது என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
3) சூரியக்குடும்பம் தொகுதியில் காணப்படும் நட்சத்திரக் குடும்பம் பாலிவழி (milkyway) யில் 100 கோடிக்கு அதிகமான நட்சத்திரம் காணப்படுகிறது.
4) மின்குமிழ், பன்னப்பதிவுக்கருவி, சினிமாபடம் மெடுக்கும் கமரா என்பவற்றை அமெரிக்கா நாட்டைச் சேர்ந்த மாபெரும் கண்டுபிடிப்பாளரான தோமஸ் அல்வா எடிசன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது

தொகுப்பு: கு. தமிழ்ச்செல்வன்.

# பெயரளவில் ஒரு போதனா வைத்தியசாலை

சிறிலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பின் காரணமாக இன்று தீவுப் பகுதி வலிவடக்கு வலிமேற்கு பகுதிகளில் அமைந்திருந்த வைத்தியசாலைகள் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளன. மேலும் அப்பகுதியில் வசித்த மக்கள் பெருமளவில் வெளியேறிவலிகாமம்பகுதியிலுள்ள அகதிகள் முகாம்களிலும் மற்றும் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

இதே வேளை இராணுவ நடவடிக்கைகளினால் காயம் அடைபவர்கள் அகதிகள் முகாம்களில் சுகாதாரச் சீர்கேடு, பொருளாதாரத்தடையினால் போசாக்கின்மை தொற்று நோய் தடுப்புகள் சரியாக மேற் கொள்ளப்படாமை என்பவற்றால்வைத்திய சாலைகளின் தேவைகள் அதிகரித்து காணப்படுகின்றன. ஆனால் சிறிலங்கா அரசின் திட்டமிட்ட நடவடிக்கைகளால் யாழ் போதனா வைத்தியசாலை என்றுமில்லாதவாறு பெரும் நெருக்கடியை எதிர் நோக்கியுள்ளது.

யுத்தத்தின் மையப் பகுதியாக காணப்படும் வடபகுதியைப் பொறுத்தவரை கூடுதல் வசதியைக்கொண்டஒரேயொரு வைத்தியசாலையாக யாழ் போதனா வைத்திய சாலையே காணப்படுகின்றது ஆனால் இந்த வைத்திய சாலை கூட வடபகுதி மக்களுக்கு எவ்வளவு தூரம் முழுமையான சேவையை வழங்குகிறது என்பதை மதிப்பீடு செய்யவேண்டியுள்ளது.

சிறிலங்காவின் ஏனைய போதனாவைத்தியசாலைகளுடன் யாழ் போதனா வைத்தியசாலையை ஒப்பிட்டுப் பார்த்தால் தென்னிலங்கையில் உள்ள சாதாரண வைத்தியசாலைகூட இதை விட கூடிய வசதிகளுடன் இயங்குகின்றது என்றே கூறலாம். போதனா வைத்திய சாலைக்குரிய அடிப்படை வசதிகள் கூட இங்கு இல்லை. கப்பல் வரவில்லையென்றால் மருந்து இல்லை, எரிபொருள்இல்லை, மின்சாரம் இல்லை என்ற நிலையில் இவ் வைத்திய சாலை இயங்குகின்றது.

மேலும் வைத்தியர்கள் பரிசோதனைகள் செய்வதற்கான அடிப்படை வைத்திய வசதிகள் கூட இங்கு இல்லை.இதனால் நோய்களைக் கண்டறிவதே பெரும் சிரமமாகின்றது நோய்கள் கண்டறியப் படமுன்பே பல மரணங்கள் சம்பவித்துள்ளன.

யாழ். போதனா வைத்திய சாலைக்கு நாளாந்தம்சுமார் 800 தொடக்கம் 950 வரையிலான மக்கள் வெளிநோயாளர் பிரிவில் சிசிச்சை பெற்று வருகின்றனர். இதில் சுமார் 75 முதல் 90 வரையிலானோர் வைத்திய சாலையில் அனுமதிக்கபபடுகின்றனர்இவ்வாறு அனுமதிக்கப்படுபவர்கள் 30 விடுதிகளிலுள்ளசுமார் 850 கட்டிலகளிலும் தங்கி இருந்து சிகிச்சை பெறுகின்றனா. இங்கு எல்லா விடுதிகளும் நோயாளர்களினால் நிரம்பி வெளி விறாந்தைகளில் படுத்திருப்பதுசாதாரண நிகழ்வு.

இந்தநோயாளருக்கும் ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கும் உணவுத் தேவைக்கு மட்டும் மாதாந்தம் சுமார் நானகரை லட்சம் ரூபா செலவிடப்படுகின்றது. இதில் சுமார் 150 நோயளரும் சுமார் 330 தொழிலாளரும் உள்ளடங்குவர். ஆனால் இங்கு சுகாதாரம் பேணப்படுவதுகுறைவு உணவின் தரமும் அவ்வளவு நன்றாக இல்லை. ஏதோ உணவு என்று உண்ண வேண்டிய நிலையில் நோயாளர்களும்ஊழியர்களும்உள்ளனர்.

வெளி நோயாளர் பகுதியில் வைததியர்கள் எழுதிக் கொடுக்கும் அளவு மருந்துகள் மருந்துக்கலவையாளர்களால் வழங்கப்படுவதில்லை என புகார் செய்யப்படுகிறது.இது தொடர்பாகவிசாரித்தபோது பின்வரும் காரணங்களை மருந்து கலவையாளர் தெரிவித்தார்.

''வெளிநோயாளர் பிரிவில் மருந்து எடுக்க வருபவர்கள் அனைவருக்கும் மருந்து கொடுக்க வேண்டும் என்பதற்காகவே நாம் டாக்டர்கள் எழுதி அனுப்பும் அளவைவிட குறைத்துக் கொடுக்கின்றோம்.ஆனால் பற்றாக்குறையாக உள்ள மருந்துகளையே இப்படி வழங்குகின்றோம். சில சமயங்களில் மாதாந்தம் அல்லது இருவாரங்களுக்கு மருந்து கொடுக்கும்படி டாக்டர்கள் எழுதியிருப்பார்கள். நாம் எம்மிடம் உள்ள மருந்தின் கையிருப்பை கருத்தில் கொண்டு மருந்து வகைகளை குறைத்துக் கொடுக்கும் போதும் இதுபற்றி நோயாளருக்கும் தெரிவிப்போம்மருந்து முடிந்ததும் வந்து பார்க்கவும் இங்கு மருந்து வந்தால்மிகுதி மருந்தை தருகின்றோம் இல்லாவிட்டால் வெளியில் எடுக்கவும் என்று அவர்களுக்கு கூறுகிறோம் என அவர் கூறினார். இவர் கூறும் காரணம் இன்றைய மருந்துத்தட்டுப்பாட்டின் காரணமாக ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருப்பினும் இந்நடைமுறை மோசடிகளுக்கு வழிவகுக்கும் என்பதைக் கவனத்திற் கொள்ளுதல் அவசியம்.

**I நிமால் I**

வெளிநோயாளர் பிரிவிற்கு வரும்சிலர் நோயாளர் போல் நடித்து மருந்து பெற்று வருவதாகவும் இவர்கள் டாக்டருக்குக் கொடு கும் தகவல்கள் பொய்யாகவும். சில சமயங்களில் ஒருவர் ஒரே நாளில் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளில் இங்கு மருந்து பெறுவதாகவும் இவர்கள் இந்த மருந்துகளைவிற்பனைசெய்வதாகவும் ஒருவர் கூறினார்.

போதனா வைத்தியசாலைக்கு வரும் மருந்துப்பொருள்களும் அவற்றின் பங்கீடும் தொடர்பாக சம்பந்தப்பட்ட ஒருவரிடம்கேட்ட போதுஅவர் கூறினார், எமக்கு வரும் மருந்துவகைகள் எமது தேவைக்கு போதுமானதாக இல்லை. எனவே நாம் மருந்துப் பொருள்களை பங்கிட்டுவழங்கவேண்டிய நிலையில் உள்ளோம். எமக்கு கிடைக்கும் மருந்து வகைகளை மூன்றாக பிரிக்கின்றோம். இதில் முதல் இரண்டையும் வாட்டில் அநுமதித்துள்ளவர்களுக்கும் கிளினிக்கிற்கு வரும் நோயாளர்களுக்கும் கொடுத்து மூன்றாவதுபிரிவையே வெளிநோயாளர் பிரிவில் உள்ள நோயாளருக்கு கொடுக்கின்றோம். நோயின் தாக்கம் கூடியவர்களே வாட்டில்அனுமதிக்கப்படுபவர்களும் கிளினிக்கிற்கு வருபவர்களும் ஆவர். எனவே தான் இப்படி செய்கின்றோம். இதனால் தான்வெளி நோயாளர்களுக்கு வழங்கப்படும் மருந்து வகைகள மட்டுப்படுத்தப் படுகிறது என்றார். இன்றையசூழ்நிலையில் போசாக்கின்மையாலும் தொற்றுநோய்களாலும் பெருமளவில் பாதிக்கப்படுவது சிறுவர்களே. கடந்த வருடம் நோய்காரணமாக போதனா வைத்தியசாலையில் அநுமதிக்கப்படடவர்களில் 60 வீதமானோர் சிறுவர்களே. இவற்றில் அநேகமான சிறுவர்களுக்கு பெற்றோரின் கவனயீனத்தினாலேயே நோய்கள் ஏற்படுவதாக வைத்தியர் ஒருவர் தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்திய சாலையில் கடந்த ஒரு தசாப்தங்களுக்கு மேல் தொடர்ந்து கடமை புரியும் ஒரு வைத்தியருடன் உரையாடும் போது அவர் இவ்வாறு கூறினார்.

தற்போது வைத்தியசாலை அடிப்படை வசதிகளற்றநிலையில் இயங்குகின்றது. மக்கள் அதிக அளவில் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இறப்புவீதம்பாரியஅளவில்அதிகரித்துக்கொண்டுசெல்கின்றது. குழந்தைகளின் மரண வீதம் தொடர்ந்தும் அதிகரிக்கின்றது இதற்கு முக்கிய காரணம் மருந்துப் பொருள்கள் தட்டுப்பாடும், வைத்திய நிபுணர்களின் பற்றாக்குறையும்ஆகும்.இவை இரண்டும் இருக்குமானால், பெருமளவில்இறப்பு வீதத்தை குறைக்க முடியும்.

''மக்களுக்கு போஷாக்கு உள்ள உணவுகள் கிடைப்பது அரிது. எனவே தான் அதிக எண்ணிக்கையான மக்கள் நோயாளராக மாறுகிறார்கள் குறிப்பாக செப்டெப்சிமியா. மூளைக்காய்ச்சல், மலேரியா, வயிற்றோட்டம் போன்ற நோயினால் அதிக அளவிலான குழந்தைகள் பாதிப்படைகின்றனர், சில குழந்தைகள் இறக்கின்றனர்''

நாளாந்தம்கடமைக்குவரும் போது நான்கடவுளிடம் வேண்டுவது இன்று மருந்துத்தட்டுப்பாடு காரணமாக அல்லது உரிய பொருள்கள் கிடைக்காத காரணத்தால் ஒருவரும் இறக்கக்கூடாது என்பதாகும்.

எம்மால் இயன்ற அளவு போராடுகின்றோம். இன்று இங்கு இருந்து நோய் நீங்கிச் செல்கின்றார்கள் என்றால் தனியே மருந்து மட்டுமல்ல, எமது பராமரிப்பும் இதில் கணிசமானபங்கைவகிக்கிறது. இவ்வாறான பராமரிப்பிற்கு தாதிகளும், பரிசாரகர்களும், ஏன்சகல மட்டதொழிலாளர்களதும்ஒத்துழைப்புகிடைக்கின்றது என்றார். சகலரும் தமமை உணர்ந்து கடமை உணர்வுடன் வேலை செய்கின்றனர் என மேலும் தெரிவித்தார்.

சுகாதாரம் பேணுவதில் போதனா வைத்தியசாலை பெரும்இடர்ப்பாடுகளைச் சந்தித்து வருகிறது. தாம் எவ்வளவு முயன்றாலும் இதனை நிவர்த்தி செய்வதில் பல சிக்கல்கள் இருப்பதாக ஊழியர்கள் தெரிவிக்கின்றார்கள்.

குறிப்பாக சிறுவர் விடுதியில் சுகாதார வசதி குறித்து கேள்வி எழுப்பிய போது சுகாதாரத்தைப் பேணுவதில் நோய்க்குள்ளான குழந்தையைப் பராமரிக்க என அவர்களுடைய தாய்மார்கூட நின்ற போதும் தேவையான துணி போன்றவற்றை கொண்டு வராமையால் சுகாதாரம் பேணுவதில் சிரமங்கள் ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

சிறுவர்களை வைத்திய சாலைகளில் அனுமதிக்கும் போது அவர்களின் உபயோகத்திற்கு சகல பொருள்களையும் வீட்டிலிருந்தே கொண்டு வருவதுதான் சிறந்தது. சில தாய்மார் அவற்றை அருகிலுள்ளவர்களிடம் பெற்றுக் கொள்ள முயல்வது குழந்தைகளுக்கு தொற்று நோய் பரவ வாய்ப்பு ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ். போதனாவைத்திய சாலையில் உத்தியோகஸ்தர்கள் ஊழியர்கள்பற்றாக்குறை மிகமுக்கியமான பிரச்சினையாக உள்ளது, இவ்வைத்திய சாலையில் ஒரு பொதுச் சுகாதார பரிசோதகர் கூட கடமையாற்றவில்லை. வைத்தியர் ஆய்வுகூட உத்தியோகஸ்தர் சிரேஷ்ட தாதிகள் முதலியவற்றில் பற்றாக்குறை நிலவுவதை புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

இப்பிரச்சினைகளின் மத்தியிலும் போதனா வைத்திய சாலை தமிழ்மக்களுக்கு குறிப்பாக யாழ் குடா மக்களுக்கு சிறந்த சேவையாற்றி வருவதையிட்டு பாராடட வேண்டும். இங்கு கடமை புரியும் ஊழியர்கள் பெரும் சிரமத்தின் மத்தியிலும் மனப்பூர்வமாக ஒத்துழைத்து நடப்பதை எவரும் மறுக்கமுடியாது.

| பதவிகள் | உள்ளதொகை | பற்றாக் குறை | தேவைப் படும் தொகை |
|---|---|---|---|
| 1. வைத்திய அதிகாரிகள் வைத்திய நிபுணர்கள் | 61 | 26 | 87 |
| 2. மருந்து கல வையாளர் | 24 | 8 | 82 |
| 3. ஆய்வுகூட உத் தியோகத்தர் | 31 | 42 | 73 |
| 4. இரத்தவங்கி உத்தியோகத்தர் | 07 | 07 | 14 |
| 5. தாதிகள் தரம் 1 தரம் 11 | 297 | 393 | 690 |
| 6. பரிசாரகர்கள் ஆண்,பெண் | 82 | 42 | 124 |

ஒ(வே)ற்றுமை?
உரிமைகள் கேட்பதில்
எம்மிடம் வேற்றுமை!
உரிமைகள் மறுப்பதில்
அவரிடம் ஒற்றுமை!!
O

தடைகள்
தமிழரின் நெடுமூச்சுத்
தடைகளைத தகர்க்கும்!
தடைகள் தகர்த்திடத்
தாயகம் உதிக்கும்!!
O

பொருட்தடைகள்!
பொருட்தடை வளர்ந்திட
எல்லைகள் வளர்ததிடும!
எல்லைகள் வளர்ந்திடத்
தாயகம் மலர்ந்திடும்!!
O

உரிமையா?
உரிமைகள் கேட்டால்
உதையும் வதையும்!
உரிமைகள் மறந்தால்
உதவியும் பதவியும்!!
O

காப்பது?
உரிமையைக் காப்பது
தியாகமும் வீரமும்!
உரிமையைத் தீய்ப்பது
துரோகமும் கோழையும்!!
O

ஏன்?
பேசியே தீர்ப்பதாய்க்
கொட்டம் அடிப்பவர்
மோதித் தீர்த்திடத்
திட்டம் வகுபபதேன்?
OOO

- சரவணன்

## வள்ளுவர் வழியில்...

### உன்னத முடிவு

உன்னத முடிவு -
அது ஒன்றையே வேண்டுவேன்!
என்னை உருவாக்கிய தலைவன் நான் இறந்த
செய்தி கேட்டுக் கண்ணீர் மல்கும் சாவை
நான் அடைவனேல் -
அத்தகைய சாவையே நான் இரந்தும்
கேடபேன்!
''புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்தும் கோள்தக்க(து) உடைத்து'' (குறள்780)

நாக. பத்மநாதன்

### துணிவும் செயலும்!

உண்பதும் உறங்குவதும் தான் வாழ்வல்ல! உயர்வு பெறு; உயிர் பெறு!

சோம்பலும் சோர்வும் கீழ்மையும் பயமும் வாழ்வாகக் கூடாது. உலகைப்பார். பிறரின் துயரில் பங்கு கொள். உரம் பெறுவாய். அடுக்கி வரும் இடர்களுக்கு உன் துணிவு பதில் சொல்லும்! நீ செயற்படு! தொடர்ந்து -
துணிந்து - செயற்படு! உலகை வாழ்விப்போன் ஆவாய்!

''துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை'' (குறள் 669)

### மானம்!

போலிகள் பல வந்தன! இவை பட்டம், பதவி,பாதுகாப்பு, சலுகை, சன்மானம் எனப்பல வடிவில் வந்தன; யாவும் மயக்க வந்தன; வீழ்த்தவே வந்தன!

அவன் அவற்றை உதைத்து வீழ்த்தினான்! தொடர்ந்தும் மனிதனாய் நின்றான்!

''இன்றி அமையாச் சிறப்பின ஆயினும்
குன்ற வருப விடல்'' (குறள் 961)

# தமிழ் நாடும் திராவிட பற்றுணர்வும்

சேரர் வாழ்ந்த சிறப்பிடம் எங்கே?
வீரர் பாண்டியர் அரசேன் கவிழ்ந்தது?
சோழர் உலவிய சோர்விலா நாட்டில்
கோழைக் கொள்கை குவிந்த தெவ்விதம்?

1967 -கலைஞர் கருணாநிதி

அந்தக் காட்டுக்கு சிங்கங்கள் தான் இராஜாக்கள். அழகிய வீரஞ்செறிந்த சிங்கங்கள் அவை. அங்கு குள்ளநரிகள் வரும்வரைக்கும் சிங்கங்கள் வீரம் நிறைந்தவையாகத்தான் இருந்தன.

நரிகள் சிங்கங்களுடன் ஒட்டுப்பொழுது சாதுக்களாகத்தான் இருந்தன. மிஞ்சுகின்ற என்புத் துண்டுகளுக்காகக் காத்து நின்றன. சிங்கங்களைப் பார்த்துப் பொறாமைப்பட்டன.

ஒருநாள் அழகிய சிங்கங்களைப் பார்த்து நரிகள் கூறின: இது என்ன பிடரிமயிர் அசிங்கமாக, நீண்டு சிலிர்த்து அழகற்று இருக்கிறது. நரிகளாகிய எங்களைப் பாருங்கள். சிறிதாகவும், அளவானதாகவும் பின்பக்கமயிர் எத்தனை அழகாக இருக்கிறது, என்றன.

சிங்கங்கள் நம்பின; தங்கள் மயிரை ஒட்ட நறுக்கின.
மறுநாளும் நரிகள் சொல்லின:

"இதென்ன நகங்களும், பற்களும் கொடூரமாக, பேய், பிசாசுகளுக்கு இருப்பது மாதிரி எங்களைப் பாருங்கள் எவ்வளவு அழகான நகங்கள் பற்கள் என்றன. சிங்கங்கள் நம்பின. பற்களையும் நகங்களையும் பிடுங்கி எறிந்தன பலமிழந்த, அவலட்சணமான சிங்கங்களாயின.

இப்போதெல்லாம், நரிகளின் ஏவல் செய்யும் சேவகர்களாக சிங்கங்கள் மாறிப் போயின. தங்கள் குலப்பெருமைகளை மறந்து போயின. எங்கும் நரிகளின் இராச்சியம் தான்.

திடீரென அந்தக் காட்டில் சிங்கக்குட்டி ஒன்று கர்ச்சித்தது. காடதிர்ந்தது. துள்ளிக் குதித்தது. நரிகள் நடுங்கின. அந்தச் சிங்கக்குட்டி தன் பிடரி மயிரை அழகு என்றது. நகங்களும், பற்களும் தன் பலமென்றது. தன் இனத்தைப் பழைய சிங்கங்களாக மாறும்படி குரல் கொடுத்தது.

மேல கூறப்பட்டது ஒரு நீதிக்கதை இல்லை. பகுத்தறிவுத் தந்தை பெரியாரின் (ஈ.வே. ராமசாமி) வரவைத் தொடர்ந்து தமிழ்நாட்டு அறிஞர்கள் அவரைப் பார்த்த பார்வை இப்படித்தான் இருந்தது. வட இந்திய ஆதிக்கத்திற்குள் தம்மை அறியாது அடிமைப்பட்டு நின்ற திராவிடர்களை விழிப்படையச் செய்ய தந்தை பெரியார் போராடியதைத்தான் திராவிட அறிஞர்கள் இப்படிப் பார்த்தார்கள்.

உண்மைதான். அந்தச் சிங்கக்குட்டி தன் வாழ்நாளின் இறுதிக் காலம்வரை அதாவது அதுகிழடாகிமரணிக்கும்வரை அந்தக் காட்டை கலக்கியது. நரிகளின் வாலை ஒட்ட நறுக்கி ஓட வைத்தது. இது தமிழகம் கண்ட வரலாறு.

ஆனால், இதில் பரிதாபம் என்னவென்றால் அந்தக் கிழட்டுச் சிங்கத்தின் மரணத்தின் பின்பு, அதன் வாரிசுகள் திரும்பவும் தங்கள் மயிர்களை ஒட்ட நறுக்கிக் கொண்டன. பற்களையும். நகங்களையும் பிடுங்கி எறிந்தன. இப்போது நரிகள் எலும்புத் துண்டங்களைப் போடாதா என காத்து நிற்கின்றன.

தந்தை பெரியார் வட இந்திய ஆளும் வர்க்கத்துக்கு எதிராக இன மான உணர்வோடு போராடிய ஒரு பெரும் தலைவர். ஆனால், அவரின் பின்பாக தமிழ்நாட்டு மக்களை இனவுணர்வோடு வழி நடாத்திச் செல்ல ஒரு நல்ல தலைவன் தோன்றவில்லை. ஒரு சிலர் விதிவிலக்காக இருந்தாலும் அவர்கள் பெரும் மக்கள் செல்வாக்கை கொண்டிருக்கவில்லை. பெரியார் போன்ற தன்னலமற்ற தலைவர்கள் தோன்றாததுதான் தமிழ் நாட்டின் இன்றைய இழி நிலைக்குக் காரணமாகவும் உளது.

அன்று தொடக்கம் இன்று வரை பொதுவாகவே இந்திய மத்திய ஆளும் பீடமும், அதிகாரமும் இந்திமொழி பேசுபவர்களின் கைகளிலேயே உள்ளது. இந்திக்காரர்கள் தம்மை மற்றைய மாநிலத்தவரை விட உயர்வாகவே கருதுகிறார்கள். ஒட்டுமொத்த இந்தியர்களும், தங்களுடைய அடிமைகளாக இருக்க வேண்டும் என்பதில் அவர்கள் உறுதியாக இருக்கிறார்கள். இதன் ஒரு கட்டமாக இந்தி மொழியை இந்தியா முழுமைக்குமான பேசும் மொழியாக்க வேண்டும் என அவர்கள் விரும்புகிறார்கள். இதற்கான முயற்சியில் அவர்கள் பல முறை இறங்கினார்கள்.

இந்திமொழித் திணிப்பை எதிர்த்துப் போராடிய மாநிலங்களில் தமிழ்நாடு முன்னணியில் நிற்கின்றது. காலத்துக்குக் காலம் வட இந்தியர்களால் ஏவப்பட்ட இந்தித் திணிப்பு எனும் இந்த நாசகாரத் திட்டத்தை முறியடிப்பதற்காக பெரியாரும் அவரது திராவிட கழகத் தொண்டர்களும் கடுமையாகப் போராட வேண்டி இருந்தது.

1938 இல் கல்லூரிகளில் ஏற்கனவே நடைமுறையிலிருந்த மாநில மொழியுடன் ஆங்கிலமும் கற்க வேண்டும் என்ற இருமொழிக் கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்தி இவ்விரு மொழிகளுடன் இந்தி மொழியையும் கட்டாயமாக கற்க வேண்டும் என்ற சட்டமூலத்தை மத்திய ஆளும் வர்க்கம் கொண்டு வந்தது. (அக்காலத்தில் வெள்ளையர்கள் இந்தியாவை விட்டு வெளியேறி இருக்கவில்லை. வெள்ளை ஆட்சிக்கு கீழ்ப்பட்ட நிர்வாக அலகு அந்நேரத்தில் வட இந்தியர்களின் (காங்கிரஸ்) கைகளில் இருந்தது]

இம் மும்மொழிக் கொள்கையை எதிர்த்து தமிழகம் போர்க்கோலம் கொண்டது. கல்லூரிகள் அனைத்திலும் பெரும் போராட்டங்கள் நடந்தன. உலகப் பொதுமொழியான ஆங்கிலத்தை ஏற்றுக் கொண்ட தமிழர்கள் இந்தியைத் தம் மீது திணிக்கப்படும் ஓர் ஆதிக்க வடிவமாகப் பார்த்தார்கள். இப்போராட்டங்களுக்கு தலைமை ஏற்று வழி நடாத்தியது பெரியாரும் அவரது கழகத் தொண்டர்களுமாகவே இருந்தார்கள். முடிவாக மத்திய அரசு அன்று தோல்வி கண்டது.

அதன் பிற்பாடு அரச உத்தியோகத்தர்கள் இந்திமொழி கற்க வேண்டும் என்று வந்த சட்டமூலமும் தமிழகத்தில் தோன்றிய எதிர்ப்பால் கைவிடப்பட்டது.

இதில் வேதனை என்னவென்றால் இந்திமொழித் திணிப்பிற்கு எதிராகத் தமிழகம் கிளர்ந்தெழுந்து போராடிய ஒவ்வொரு முறையும் இந்தி மொழித் திணிப்பை ஆதரித்து தமிழ்நாடு காங்கிரசார் குரல் கொடுத்தார்கள். அவர்கள் தமிழர்களாக இருந்தும் அதைச் செய்தார்கள். அவர்களுக்கு தமது கட்சியும், பதவிகளும் பெரிதாகத் தெரிந்ததே ஒழிய தமது இனமும், அதன் தன்மானமும் ஒருகாலத்திலும் பெரிதாகத் தெரியவில்லை.

மக்களை அணி திரட்டி, அவர்களை விழிப்படையச் செய்து, இனத்தின் மீதும், மொழியின் மீதுமான பற்றுணர்வை ஏற்படுத்தி வட இந்தியாவிலிருந்து காலத்துக்குக் காலம் அடித்த இந்திப்புயலை தடுத்து நிறுத்தி பெரியாரும் அவர் இயக்கத்தவரும் வெற்றி கண்டார்கள்.

இன்று தமிழகத்தில் தோன்றி இருக்கும் நிலையை சற்று அலசிப் பார்ப்போம். பரபரப்பாக ஓய்வொழிச்சலில்லாமல் உழைக்கும் நடுத்தர வர்க்க மக்கள் கூட்டம் ஓய்வாக இருந்து தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்க்கும் முன் இரவு நேரத்தில், இதுவரை நாளும் தமிழ் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பிய தொலைக்காட்சி நிலையம், அந் நேரத்தை இந்தி மொழி நிகழ்ச்சி ஒலி பரப்புக்கு ஒதுக்கியது. இந்தி மொழித் திணிப்புக்குத் புது விதமானதொரு வடிவத்தை மத்திய அரசு இப்படிக் கண்டு பிடித்திருந்தது.

இது பொதுவான தமிழ் மக்களுக்கு அச்சவுணர்வை ஏற்படுத்தியது. பெரியார் விதைத்த எண்ணக் கருக்கள் முற்றாக மறைந்து போகாத தமிழக மண்ணில் இத்தகைய உணர்வு எழுவது இயல்பே; பொதுமக்களின் உள்ளத்தில் எழுந்த இத்தகைய இந்தி மொழித் திணிப்பிற்கு எதிரான உணர்வை வழி நடாத்திச் செல்வதற்கு, தமிழகத்தில் இன்று இனவுணர்வுள்ள தலைவர்களை தேடி வலை வீச வேண்டி இருக்கிறது.

இந்தப் பிரச்சினையை, தந்தை பெரியாரின் வழிவந்த திராவிடஇயக்கங்களின் தலைவர்கள் தமது அரசியல் இலாபங்களுக்காக அவரவருக்கே உரிய பாணியில் பயன்படுத்தினார்கள்.

பெரியாரின்இலட்சியங்களை மறந்து போய் அவரது சொத்துக்களை மட்டும் கட்டிக் காத்து வரும் இன்றைய திராவிட கழகத்தின் தலைவர் வீரமணி அவர்கள் இவ் இந்தித் திணிப்பை கண்டித்து, புகையிரத நிலையங்களிலுள்ள இந்திமொழி எழுத்துக்களை அழிக்கும் போராட்டத்தை அறிவித்தார்.

தொடர்பில்லாத இரண்டு பிரச்சினைகளுக்குஅவர் முடிச்சுப் போட்டார் புகையிரத நிலையங்களில் இந்தி மொழி அறிவிப்புக்கள் நீண்ட நாட்களாகவே இருக்கின்றன. அதை அழிக்க வேண்டும் என்ற எண்ண உதயம் இவருக்கு முன்பே வந்திருக்கலாம்.

இதில் இன்னொரு அதிசயம், வீரமணி அவர்கள் அறிவித்த போராட்டத்தின் வலுவையும், தாற்பரியத்தையும் அவரும், மக்களும் தமிழக காவல் துறையினரும் நன்றாகவே அறிந்திருந்தார்கள்.

இவர்ஊர்வலமாகச் சென்று இந்தி மொழியை அழிக்க கையை உயர்த்தும் போது அனேகமாக கைது செய்யப் பட்டுவிடுவார் என்பதும். அன்று மதிய உணவுக்கு சிறையிலிருந்து வீட்டுக்கு வந்துவிடுவார் என்பதும், அனைவரும் அறிந்ததுதான். இது மற்றைய தலைவர்களுக்கும் பொருந்தும். இந்த அரசியல் சித்து விளையாட்டை தமிழக மக்கள் அறிந்தே இருக்கிறார்கள்.

அதே நேரம் இந்த தொலைக்காட்சி இந்தி மொழித் திணிப்பை அ.தி.மு.க. தலைவரும், முதல்வருமான செல்வி ஜெயலலிதா வேறொரு விதத்தில் பயன் படுத்தினார்.

அ.தி.மு.க. விற்கும் காங்கிரசிற்குமான உறவு முறிவடைந்து விட்டது எனும் நிலையில், காங்கிரசாருக்கு எதிராக திராவிட உணர்வை தட்டி எழுப்ப இந்த அம்மையார் முயன்றார். இவ்வளவு நாட்களும் இனவுணர்வோ, திராவிட பற்றுணர்வோ இல்லாமல் காங்கிரஸ் கட்சியின் நெருங்கிய சகாவாக இருந்த செல்வி ஜெயலலிதா தமிழ் மக்களிடையே எழுந்த உணர்வில் தன் அரசியல் இராஜதந்திர காய் நகர்த்தலைச் செய்தார்.

தமிழக அரசு இந்த இந்தி மொழித் திணிப்பை கண்டித்ததும், தமது பாரம்பரிய முறையுடன் காங்கிரசார் பொங்கி எழுந்தனர். அ.தி.மு.க. காங்கிரஸின் உறவு மேலும் விரிசலடைந்தது. ஆனாலும் அ.தி.மு.க. வின் 17 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக மத்தியில் பலமில்லாத காங்கிரஸ் கட்சி செல்வியின் காலில் விழ வேண்டிய நிலையிலேயே இருக்கிறது. தனது ஆட்சியைகாப்பாற்றிக்கொள்வதற்காக ஜெயலலிதாவும் காங்கிரசை எதிர்பார்க்க வேண்டி உள்ளது.

இதனிடையே தந்தை பெரியாரின் சீடர்களில் ஒருவரும் அவரது கொள்கைகளை தொடர்ந்தும் கடைப் பிடிப்பதாக கூறிவருபவரும், 1938 இல் கல்லூரிப் பருவத்திலேயே இந்தி மொழித் திணிப்பை எதிர்த்துப்போராடியவருமான திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு. கருணாநிதி அவர்கள் இந்தப் பிரச்சினையில் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் நடுவில் நின்று விழிக்கின்றார்.

'தென்றலைத் தொடாமல் அடிக்கடி தீயைத் தாண்டிய இந்தப் பெரும் தலைவர் இந்தமுறை முடிவெடுக்க முடியாமல் தீயிற்கு நடுவில் நிற்க வேண்டிய நிலையில் இருக்கிறார்.

இந்தத் தொலைக்காட்சி இந்தி மொழித் திணிப்பை கண்டித்து. மக்கள் எதிர்ப்பியக்கம் ஒன்றை நடாத்த, பலமான கட்சி அமைப்புள்ள இந்தத்திராவிடத் தலைவரால் முடியும். ஆனால், இந்தப் 'பெரும் தலைவர், இவ் விடயத்தில் முடிவெடுப்பதற்கு அ.தி.மு.க. - காங்கிரஸ் இடையேயான உறவு நிலையை நாடிபிடித்துப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்.

அக் கட்சிகளின் உறவுநிலை மீண்டும் பலப்படுமாக இருந்தால் மத்திய அரசின் தொலைக் காட்சி இந்தி மொழித் திணிப்பை எதிர்த்து கடுமையான குரல் கொடுக்க இந்தத் தலைவர் தயங்கப்போவதில்லை.

அப்படி இல்லாமல், காங்கிரஸ் - அ.தி.மு.க உறவு முறிவடைந்து விடுமாக இருந்தால், இந்தத் திராவிடச் சிங்கம் காங்கிரஸ் கட்சியின் நல்லெண்ணத்தை பெறுவதற்காக தொண்டை வரை வந்த கண்டனக்குரலை சிறிய முனகலுடன் மீண்டும் விழுங்கத் தயாராக இருக்கிறது.

இத்தகையதோர் நிலை தான்; அரசியற் சுயநலம் தான்; ஈழத்தமிழர்களின் தலைவர்களில் ஒருவரான கிட்டுவும், அவரது தோழர்களும் கடலில், வட இந்திய ஆதிக்கப் பிடிக்குள் சிக்கி மரணத்துக்கு அருகில் நின்ற போது இந்தத் திராவிடத் தலைவர்களின் மௌனத்துக்குக் காரணமாக இருந்தது.

எது எப்படியோ, தமிழ் நாட்டுத் தமிழர்களை வழி நடாத்தும் தலைவர்களாக தற்போது இந்தத் 'தலைவர்களே' இருக்கிறார்கள் என்பது கவலைக்குரிய உண்மை.

—குலோத்துங்கன்—

## பாராட்டு விழா

இன்னிசை வேந்தர் பொன். சுந்தரலிங்கம்அவர்களைபாராட்டிக் கௌரவிக்குமுகமாக அகில இலங்கை கம்பன் கழகம் நடாத்தும் ''பாராட்டு விழா'' நாளை மறுதினம் ஞாயிறு காலை 8. 30 மணிக்கு கம்பன் கோட்ட மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## பொருட்காட்சி நீடிப்பு

வேம்படி மகளிர்கல்லூரியில் நேற்றைய தினம் ஆரம்பித்து வைக்கப்பட்ட விஞ்ஞான - கணித பொருட்காட்சி மகளிர் வேண்டுகோளிற்கிணங்க நாளை வரை நீடிக்கப்பட்டுள்ளது. பொருட்காட்சி காலை 8. 30 இல் இருந்து பி. ப 4.30 வரை திறந்திருக்கும்.

இத் தகவலை வேம்படி மகளிர் கல்லூரியின் அதிபர் செல்வி ஆர். ராஜரெட்ணத்தின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

## தென்மராட்சியில் சிறுதானிய செய்கை

கைதடி, நாவற்குழி, மறவன்புலோ, தனங்கிளப்பு, மந்துவில், வரணி, உசன் போன்ற பகுதிகளில் கடந்த திங்கட்கிழமை பெய்த மழையினை பயன்படுத்தி தென்மராட்சிப் பகுதியில் உள்ள பயிர் நிலங்களில் சிறுதானியப் பயிர்ச் செய்கையை உடன் மேற்கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்வேண்டுகோள்விடுகின்றது.

சிறுதானியச் செய்கையில் ஈடுபடுபவர்களை ஊக்குவிக்கும் வகையில் உழவு செய்து கொடுப்பதற்கும், சிறுதானிய விதைகளை விநியோகிப்பதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. எனவே விவசாயிகள் கொடிகாமத்தில் உள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக தென்மராட்சி கோட்டச் செயலகத்துடன் தொடர்பு கொண்டு விதைகளைப் பெற்றுக் கொள்வதுடன் உழவுக்கு பதிவு செய்து உடன் விதைப்பில் ஈடுபடும்படியும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் கேட்டுள்ளது.

# அம்மா ஆஸ்பத்திரி சென்றபோது ராணுவம் எம்மைப் பிடித்தது

## விடுவிக்கப்பட்ட சிறுமி தெரிவிப்பு

(நெல்லியடி)

"அம்மாவின் பிரசவத்திற்காக, எங்களை வீட்டில் நிறுத்திவிட்டு, யாழ். வைத்திய சாலைக்கு அப்பா கூட்டிச் சென்றார். அவ்வேளையில் திடீரென அங்கு சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவம் எம்மை கைது செய்தது"

இவ்வாறு, கடந்த 7 மாதங்களாக, மாதகல் பகுதியில், தனது பேர்த்தியுடன் வசித்துவிட்டு, அங்கிருந்து விடுதலையாகி புதன் குமாரி கப்பலில் பருத்தித்துறையை வந்தடைந்தவர்களில், ஒரு சிறுமியான குகநந்தினி சிவபாலன் (வயது 10) எமது நிருபருக்கு தகவல் தருகையில் தெரிவித்தார்.

அச்சிறுமி சோகமே உருவாக அங்கு தனது 2 வயது நிரம்பிய சகோதரியுடன் வந்த வேளை, எமது நிருபருக்கு மேலும் பேட்டி தருகையில்:-

எமது வீட்டை சுற்றி வளைத்த இராணுவம், எம்மை விசாரணை செய்தனர். அச்சமயம், எனது தந்தையின் தாயாரும் எங்களுடனேயே இருந்தார்.

எனது சகோதரி, அம்மாவையும், அப்பாவையும் நினைத்து இரவு பகலாக அழுத வண்ணம் இருந்தார்.

இவ்விடயத்தை, அப்பகுதிக்கு பொறுப்பான இராணுவ அதிகாரியிடம் பலதடவை அழுது கூறினேன். இவ்வளவு காலமும் தடுத்து வைக்கப்பட்ட பின் நாம் செஞ்சிலுவைச்சங்க உதவியுடன் இங்கு வந்து சேர்ந்தோம் என்று கூறினார்.

பருத்தித்துறையை வந்தடைந்த இவர்களை இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தைச் சேர்ந்த பெண் அதிகாரி ஒருவர், தனது கரங்களினால் கட்டி அணைத்து வந்து, தேநீர் உட்பட சிற்றுண்டிகளையும் வழங்கியதைக் காண முடிந்தது. (30)

---

## கலந்துரையாடல்

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட கிராமசேவையாளருடனான கலந்துரையாடல் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நாளை சனிக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு நடைபெற இருப்பதால் சகல கிராம சேவையாளரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

## கருத்தரங்கு

(குருநகர்)

யாழ். பிரதான வீதி, திருமறைக் கலாமன்றக் கேட்போர் கூடத்தில் இன்று மாலை 5.00 மணிக்கு பண்பாடு கருத்தரங்கம் திரு. வில்லியம் தலைமையில் நடைபெறும்.

பிரபல எழுத்தாளர் திரு. செம்பியன் செல்வன் பண்பாடு பற்றிக் கருத்துரை நிகழ்த்தவுள்ளார். (21)

## காங்கேசனில் மெரினால்

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இருந்து உணவுப் பொருள்களை ஏற்றிவந்த மெரினால் தற்போது காங்கேசன் இறங்கு துறையில் தரித்து நிற்கின்றது. இக்கப்பலிலிருந்து ஒரு தொகுதி உணவுப் பொருள்கள் காங்கேசன்துறை துறைமுகத்தில் இறக்கிய பின் மிகுதி உணவுப் பொருள்களுடன் ஒரு சில நாட்களில் பருத்தித்துறை இறங்குதுறைக்கு வரும் என செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

பருத்தித் துறைக்கு வரும் இக் கப்பலில் குறைந்தது 1000 மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் இருக்குமெனவும் இக் கப்பல் வந்தவுடன் இறக்கும் வேலைகள் துரிதமாம் நடைபெற இருப்பதாகவும் தெரியவருகின்றது. (சி)

## ஆலோசனை பெறவும்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விஞ்ஞான பீடத்திற்கு சேர்க்கைப் பட்டியல் மூலமாக பௌதிகத் துறைக்கு 1991/1992 ஆம் கல்வியாண்டிற்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் தங்கள் கல்வி சம்பந்தமான ஆலோசனைகளைப் பெறுவதற்காக விஞ்ஞான பீட பதில் பீடாதிபதி பேராசிரியர் வி.க. கணேசலிங்கம் அவர்களை விஞ்ஞான பீடாதிபதி அலுவலகத்தில் சந்தித்து உரையாடும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

---

ஞாயிறு

5 பிள்ளைகளின் தந்தை சி. தம்பிப்பிள்ளை (வயது 49 நாகர் கோவில் கிழக்கு) பலியானார். அத்துடன் சாவகச்சேரியைச் சேர்ந்த ராணி (வயது 30) அவருடைய கைக் குழந்தை, இனந்தெரியாத நபரொருவர் உட்பட நால்வர் இச்சம்பவத்தில் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

---

மகிழவெட்டுவான்

சுமார் 23 இராணுவ வீரர்கள் மீது இலங்கை அரசு குற்றம் சாட்டியுள்ளது.

ஜெனிவா நகரில் கூடிய ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் இலங்கையின் சட்டமா அதிபரால் எடுத்துரைக்கப்பட்டது. கடந்த பல வருடங்களாக படுகொலைகள் நடைபெற்றுவருகிறது.

இக் கொலைகள் தொடர்பாக அரச படைகள் மீது குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும். இவ்வழக்கு அடுத்த வாரம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

---

அவசரகால

ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

இக் கப்பல் மூலம் குடாநாட்டுக்கு வந்து வரும் உணவுப் பொருள்கள் குடாநாட்டுக்கான தாங்கு நிலைக் கையிருப்பில் வைக்கப்படும் என்று தெரியவருகிறது.

இவ்வாறான தாங்கு நிலைக் கையிருப்பைப் பேணுவதற்காக யாழ். செயலகம் புதிய உணவுக் களஞ்சியங்களைப் பயன்படுத்தவுள்ளது. மேற்படி எடையுடைய அத்தியாவசிய உணவுப் பொருள்களை ஒரே களஞ்சியத்தில் வைத்துப்பேண முடியும் என்ற நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இக் களஞ்சியத்தில் வைத்துப் பேணப்பட இருக்கும் மேற்படி உணவுப் பொருள்களின் கையிருப்பை, குடாநாட்டில் ஏற்படும் எதிர்பாராத திடீர் உணவு நெருக்கடி மற்றும் மக்களின் இடம் பெயர்வு ஆகிய சந்தர்ப்பங்களின் போது பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (க)

---

## பாரதீய ஜனதா தலைவர் ஜோசி படுகாயம்

(டில்லி)

டில்லியில் நேற்று ஊர்வலத்தில் கலந்து கொள்ள வந்த பாரதீய ஜனதாக் கட்சித் தொண்டர்கள் மீது பொலிசார் நடாத்திய தடியடியில் பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்களில் ஒருவராகிய முரளி மனோகர் ஜோசி படுகாயம் அடைந்தார். வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கும் இவர் அபாயக் கட்டத்தைத் தாண்டிவிட்டதாக சொல்லப்படுகிறது.

மேலும் இவ் ஊர்வலத்தில் கலந்துகொள்ள இருந்த பாரதீய ஜனதாக் கட்சி தலைவர் எல்.கே. அத்வானி உட்பட 6000 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## விடுதியில் தேநீர் அருந்திய 20 இராணுவம் மயக்கம்

கொழும்பு நாரஹேன்பிட்டிய இராணுவ முகாம் ஒன்றில் தேநீர் அருந்திய சுமார் இருபது இராணுவ சிப்பாய்கள் திடீர் மயக்கமுற்றுக் கீழே விழுந்துள்ளனர்.

மயக்க நிலைக்குட்பட்ட இராணுவ சிப்பாய்கள் தற்பொழுது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## மெய்வல்லுனர் போட்டி

(வடமராட்சி)

பருத்தித்துறை முனை சென் தோமஸ் பெண்கள் பாடசாலை இல்ல மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு அருட் சகோதரி டொறின் றீனா தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வடமராட்சி பிரதிப் பணிப்பாளர் திரு. எஸ். செல்லத்துரை கலந்து கொள்வார். (வோ)

---

யாழ்.

இதன்காரணமாகமீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர்கள் தமது மீன்பிடி உபகரணங்களையும், படகுகளையும் விட்டுக் கடலில் பாய்ந்து நீந்திக்கரை சேர்ந்துள்ளார்கள் எனவும், சிலர் கல்முனைக் கரையில் ஏறி நடந்து யாழ்ப்பாணப் பகுதியை வந்தடைந்துள்ளார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளைபலாலியிலிருந்து வந்த ஹெலிகொப்டர் ஒன்றும் இவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. குருநகரைச்சேர்ந்த குமரன், பவா ஆகியோரின் மீன்பிடி வள்ளங்களும், மீனவர்களும் இதுவரை கரைக்குத் திரும்பவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (17)

## தற்கொலை

(வடமராட்சி)

பட்டதாரி ஆசிரியை ஒருவர் தனது வீட்டில் கழுத்தில் சுருக்கிட்டுதற்கொலை செய்து கொண்டார்.

வல்வெட்டித்துறை சிதம்பரா கல்லூரி ஆசிரியையான செல்வி தர்வர்த்தினி சோமதி முத்துக்குமாரு (வயது 31) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார்.

இதுகுறித்து விசாரணை நடாத்திய மரண விசாரணை அதிகாரி திரு. வீ. நடராசா தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கினார். (வோ)

ஃ ஃ ஃ

ஒட்டுமடத்தைச் சேர்ந்த மகேந்திரனி மகேந்திரன் (வயது 21) என்ற இளம் பெண் அலரி விதையை உட்கொண்டு நேற்று தற்கொலை செய்துள்ளார்.

இவர் நேற்றுக் காலை அலரி விதையை உட்கொண்ட நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சொற்ப நேரத்திலேயே மரணமடைந்தார்.

## விபத்து

கச்சேரி - நல்லூர் வீதியில் வெளிச்சம் எதுவுமின்றி வந்த உழவு இயந்திரமொன்று சைக்கிளில் சென்றுகொண்டிருந்த குணசீலன் (வயது 19) என்பவரை மோதிவிட்டு நிற்காது சென்றுவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

---

யாழ் / வைத்தீஸ்வராக் கல்லூரி

**சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவு**

## 2-ம் ஆண்டு நிறை விழா

இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு கல்லூரி திறந்தவெளி அரங்கில்

"ஊரான்மை" மலர் வெளியீடு, தொடர்ந்து கொக்குவில் "கலாபவன்" மாணவிகளின்

**பரத நாட்டியம்**

பிரபல மேடைப் பாடகர் சகோ. ஸ்ரனி சிவானந்தனுடன் ஈழத்தின் பல முன்னணிப் பாடகர்கள் கலந்து சிறப்பிக்கும்

"ஆனந்" இசைக் குழுவினர் வழங்கும்

**'இசை இன்பம்'**

மெல்லிசை நிகழ்ச்சி

நிகழ்ச்சி தொகுப்பு: மணிக்குரல் மேஜர் ஷண்

முற்றிலும் இலவசம் – முழுவதும் கனிரசம்

---

வைபவ அனுசரணை:

ராசிசில்க் நவீனசந்தை, யாழ்ப்பாணம்

ஷண் றெக்கோடிங் ஸ்போட் நல்லைசந்தை, யாழ்ப்பாணம் (4067)

---

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**25-02-93**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 1-8407

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

இல்லை.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

42-7975, 27-9404, 26-1690, 24-3262, 28-1020, 40-2829.

---

## மரண அறிவித்தல்

## குமாரசாமி அன்னம்மா

குமாரசாமி அன்னம்மா 18-02-93 இல் மகரகம பெரியாஸ்பத்திரியில் காலமாகிவிட்டார். அன்னார் இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர் குமாரசாமியின் அன்பு மனைவியும், இரத்தினத்தின் சகோதரியும், புவனேஸ்வரி ஆசிரியை), காலஞ்சென்ற நவயோகராசா, மங்களேஸ்வரி (பேபி) (ஜேர்மனி), சந்திரேஸ்வரி(ராணி), பேரின்பராசஜா, ஜெகதீஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் அருமைத் தாயாரும், ஞானலிங்கம் (மின்சார பொறியியலாளர், கொழும்பு), கிருஷ்ணபிள்ளை (ஜேர்மனி), அமிர்தலிங்கம் (வர்த்தகர், சாவகச்சேரி), சந்தையா (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும், இளங்குமரன், இளம்பூரணி, கவிதா, காயத்திரி, வைதேகி, சயேந்திரன், பாலதர்சிகா, நளாயினி, குமுதா, பிரியா, சஜானி, சஜான் ஆகியோரின் பேர்த்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 21-02-93இல் பொரளைக் கனத்தை மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

188, கண்டி வீதி,
சாவகச்சேரி.

தகவல்:
திருமதி அமிர்தலிங்கம்

(4351)

---

## கைப்பற்றிய

| | | | |
|---|---|---|---|
| ஃ 40 எம். எம் செல்கள் | — 08 | ஃ மழைக்கவசம் | — 06 |
| ஃ ஜே. ஆர். சிறிது | — 03 | ஃ மிகுதி பெல்ட் | — 02 |
| ஃ ஜே. ஆர். பெரிது | — 01 | ஃ ஹெல்மட் | — 11 |
| ஃ ஏகே. எல். எம். ஜி கோல்சர் | — 01 | ஃ தண்ணீர்க் கான் | — 13 |
| ஃ ஏகே. கோல்சர் | — 08 | ஃ சாப்பாட்டுப் பெட்டி | — 01 |
| ஃ கிட்பாக் | — 10 | ஃ இராணுவச் சப்பாத்து சோடி | — 05 |
| ஃ பைனாகுலர் | — 01 | ஃ நோமல சப்பாத்து சோடி | — 03 |
| ஃ பராவலட் | — 08 | | |

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993ஆம்ஆண்டு பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது